விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: இருபது

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 15 புதன்கிழமை (01.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 347

# ஜனாதிபதியை கைது செய்யும் திட்டங்களுக்கு முற்றுப்புள்ளி!

## தமிழ் மக்களின் போராட்டம் தொடர்கிறது

(லண்டன்)

லண்டனுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கைது செய்யும் பிரித்தானிய தமிழ் மக்களின் திட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய சட்டங்களுக்கமைய ஜனாதிபதி காப்பாற்றப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள பிரிட்டன் வாழ் தமிழர் பேரவை அமைப்பின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)



# ஐ.நாவின் நிலைப்பாட்டை அறிய அமெரிக்கா ஆர்வம் காட்டியது

## விக்கிலீக்ஸ் இணையம் தகவல்

(ஸ்டாக்ஹோம்)

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள அமெரிக்கா ஆர்வம் காட்டியதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க தூதரகங்கள் தொடர்பான இரகசிய தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆவணங்களில் இலங்கை தொடர்பான மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் நிலைப்பாட்டை அறிவிக்குமாறு ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்கப் பிரதிநிதிக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

2009ஆம் ஆண்டு ஜுலை மாதம் இவ்வாறான (20ஆம் பக்கம் பார்க்க)

## கட்டிடம் இடிந்து விழுந்ததில் இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(அச்சுவேலி)

கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது.

பழைய கட்டிடம் ஒன்றினை உடைத்துக் கொண்டிருந்தபோது அக் கட்டிடம் இடிந்து விழுந்ததினால் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பருத்தித்துறை சக்கோட்டையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பானியன் தேவன் (வயது 33) என்ற இளம் குடும் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நாடு திரும்பியதும் தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பிரித்தானிய விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அவ்வப்போது நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பல இணக்கங்கள் எட்டப்பட்டுள்ளதாகவும் இந்த இணக்கங்கள் ஜனாதிபதிக்கும் கூட்டமைப்பின் தலைவர்களுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக அமையும் எனவும் அந்த தகவல்கள் கூறுகின்றன. வடக்கு கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட தமிழ் தேசியக் கூட்டமைப்பு முனைப்புக்களை மேற்கொண்டுள்ள தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், வடக்கின் அபிவிருத்திக் கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொண்டு வருவதாக தெரியவருகிறது. (ச–5)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாராட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கை வரவேற்கத்தக்கதென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு தொடர்பான விவாதத்தை நிறைவு செய்து உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கில் மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டின் பாதுகாப்பு மிகவும் அடிப்படையானது. இதன் காரணமாகவே வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவுகள் உயர்த்தப் பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கர (20ஆம் பக்கம் பார்க்க)

HIV / AIDS

உலக எயிட்ஸ் தினம் 2010

"HIV/AIDS தொடர்பில் உலகளாவிய வசதிகளை ஏற்படுத்துதலும் மனித உரிமைகளை மதித்தலும்"

- எம்மை நேசிப்பவர்களுக்கு என்றும் விசுவாசமாயிருப்போம், எம்மை மட்டுமன்றி எமது அன்புக்குரியவர்களையும் எமது சமூகத்தையும் HIV / AIDS இலிருந்து பாதுகாப்பது எமது பொறுப்பாகும்.
- விரும்பியோ விரும்பாமலோ ஆபத்தான பாலியல் தொடர்பு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்தால் உரிய மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்வோம்.
- HIV / AIDS பற்றி அனைவரையும் அறிவூட்டி அவர்களது பாதுகாப்புக்காக வலுவூட்டுவோம்.
- மேலதிக தகவல்களையும், சேவைகளையும் அறை இல.33, யாழ்.போதனா வைத்தியசாலை அல்லது உங்கள் பகுதி வைத்தியசாலைகள் அல்லது சுகாதார உத்தியோகத்தர்களிடம் நம்பகத் தன்மையுடன் எவ்வித தயக்கமுமின்றிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆக்கம்: சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்.



"HIV/AIDS - எங்களது பாதுகாப்பு எமது கைகளிலேயே"

(க-17003)

அனுசரணை : Unicef

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழரின் பிரச்சினைத் தீர்வுக்கு காலக்கெடு நிர்ணயிக்க முடியாது

## விமான நிலையத்தில் வைத்து கிருஷ்ணா தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு விரைவில் சுமூக தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இந்தியா ஆர்வமாக உள்ளது. எனினும் இது தொடர்பாக காலக்கெடு எதுவும் நிர்ணயம் செய்ய முடியாது என இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறியுள்ளார்.**

**இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை டில்லி திரும்பும் வழியில் விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

தமிழர் பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றுபல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். எனினும் இந்த விவகாரத்தில் காலக்கெடு எதுவும் நிர்ணயிக்க முடியாது. இலங்கை அரசு எவ்வளவு வேகமாகச் செயற்படுகிறதோ அதைப்பொறுத்தே பிரச்சினைக்கு தீர்வு எட்ட முடியும். தமிழர் பிரச்சினைக்கு விரைவில் சுமுக தீர்வு காணவேண்டும் என்பதில் இந்தியா ஆர்வமாக உள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பு வெற்றிகரமாக



அமைந்தது. பிரதமர் மன்மோகன் சிங்கை இலங்கை வருமாறு அவர் அழைப்புவிடுத்துள்ளார். வரும் ஆண்டில் பிரதமர் பல்வேறு நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். இலங்கைக்கு அவர் எப்போது செல்வார் என்பது குறித்து ஆலோசித்து முடிபு எடுக்கப்படும் என்றார்.

தமிழக மீனவர் பிரச்சினை, தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை அடிக்கடி தாக்குதல் நடத்துவது குறித்து பேசப்பட்டதா? என்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த எஸ்.எம்.கிருஷ்ணா இது குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷ, வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருடன் பேசியதாகத் தெரிவித்தார்.

இரு நாட்டு மீனவர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினை குறித்து இலங்கைத்தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினேன். இந்த விவகாரத்தில் 2008 செயல்முறைத் திட்டத்தைக் கடைப்பிடிக்க யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கு வரிவிலக்கு அளிப்பது குறித்தும் அந்த நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளேன் என்று கிருஷ்ணா கூறியுள்ளார். (ச-5)

## யாழ் மாநகர சபைக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ் மாநகர சபைக்கு எதிராக தொல்லியல் திணைக்கள யாழ் அலுவலகத்தால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் வீரசிங்க மண்டப முற்பகுதியில் தேங்கியிருந்த மழை நீரை பைக்கோ இயந்திரத்தின் மூலம் யாழ் கோட்டையின் அகழிக்குள் அகற்றியுள்ளனர். இதன்போது கோட்டையின் அகழியின் சுவர் அனுமதியின்றி உடைத்தமைக்கு எதிர்ப்புத்தெரிவித்தே யாழ்பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் கோட்டை நெதர்லாந்து அரசின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகிறது. புனரமைப்பின் போது கட்டங்கள் சேதமடையாதவாறே கட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாநகரசபையின் செயற்பாடு முன்னறிவித்தல் ஏதுமின்றி உடைக்கப்பட்டது தொடர்பாக தொல்லியல் திணைக்கள யாழ் அதிகாரிகளால் கடும்விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸ் நிலையத்தில் முறையிடுவதற்காக இரு தடவைகள் சென்றதாக திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## ஹைகோப் வழக்கு விசாரணை ஜனவரி 6 வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

இராணுவ நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதிமன்றமா? என உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் வரை சரத் பொன்சேகாவிற்கு எதிரான ஹைகோப் வழக்கை ஒத்திவைப்பதென கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபரான சரத் பொன்சேகா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். இராணுவ நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றமா? என்பது குறித்து விசாரணை நடத்த எதிர்வரும் 6 ஆம் திகதி உயர்நீதிமன்றம் கூடவுள்ளதுடன் அதன் பின்னர் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வது பொருத்தமானது என அரசாங்க சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

அதனை ஏற்றுக்கொள்ள மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ ஹைகோப் வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஜனவரி 14 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்வதில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக சரத்பொன்சேகாவிற்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கை தொடர்ந்துள்ளார்.

இந்த வழக்கின் மற்றொரு சந்தேக நபரான தனுன திலகரட்ன தலைமறைவாகியுள்ளதுடன் அவரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிமன்றம் அண்மையில் பிடிவிராந்து பிறப்பித்தது. (எ-1)

# வடக்கு கிழக்கை தமிழ் நாட்டுடன் இணைக்க இந்திய அரசு திரை மறைவில் முயற்சி

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு கிழக்கை தமிழ் நாட்டுடன் மறைமுகமாக இணைக்க இந்தியா முயற்சிக்கின்றது. இவற்றின் உள்நோக்கம் வடக்கு கிழக்கு இந்தியாவின் ஒரு மாநிலம் என உலகிற்கு எடுத்துக் கூற இந்தியா முயற்சிக்கின்றது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தலைமையாகக் கொண்டு இலங்கை தேசிய சக்திகள் பெற்ற மாபெரும் வெற்றியை அழிப்பதற்கான பாரிய சூழ்ச்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இந்தச் சூழ்ச்சிகளை தோற்கடித்து வெற்றியை முன்னெடுத்துச் செல்வது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொறுப்பு எனக் கருதுகின்றோம்.

இந்தச் சூழ்ச்சிகளின் பின்னணியில் வெளிநாட்டுச் சக்திகளும் அவர்களின் தேசிய முகவர்களான சக்திகள் இருக்கின்றன என்பதே எமது நம்பிக்கை. வெளிநாட்டுச் சக்திகளின் பிரதான எதிர் சக்தியாக இந்தியா இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இந்தியா அண்டை நாடுகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஒரே நோக்கம் தமது பொது எதிரியான சீனாவின் அழுத்தங்களை முறியடிப்பதாகும். இந்த பின்னணியிலேயே அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா தேசிய பிரச்சினைகள் ஊடாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து பேசியதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

தமிழர்களுக்காக கலாசார நிலையம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்கவேண்டும் என கிருஷ்ணா யோசனை தெரிவித்தார். இந்த கலாசார நிலையத்தின் மூலம் எதனை இந்தியா எதிர்பார்க்கிறது என்பதை எம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

அதேபோல் பலாலி விமான நிலையம் பொதுமக்களுக்காக திறக்கப்பட வேண்டும் எனவும் ராமேஸ்வரம் பாலம் திறக்கப்பட வேண்டும் எனவும் கிருஷ்ணா கூறியிருந்தார்.

இதன் அர்த்தம் என்னவெனில் வடக்குக் கிழக்கை மறைமுகமா தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டும் என்பதாகும். இவற்றின் உள்நோக்கம் வடக்கு கிழக்கு இந்தியாவின் ஒருமாநிலம் என உலகிற்கு எடுத்துக் கூறுவதாகும்.

இந்தியாவின் இந்த நடவடிக்கை கோடுபோட்டு வடக்கு கிழக்கை ஆக்கிரமித்ததை விடமிகவும் ஆபத்தானது. 13 வது அரசியலமைப்புத் திருத்தம் மூலம் ஏற்படுத்தப்படும் சமஷ்டி அரசாங்கத்தை இந்தியாவின் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக மாற்றும் அடித்தளத்தை இடும் நோக்கிலேயே கிருஷ்ணா இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார் எனவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர மேலும் கூறியுள்ளார். (எ-5)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## உத்தவ கீதை

அர்ச்சுனன் கேட்ட கேள்விக்கெல்லாம் பகவான் கிருஷ்ணன் பதில் சொன்னார். அதற்குப்பெயர் பகவத் கீதை. அதேமாதிரி உத்தவன் கேட்ட கேள்விக்கும் அவர் பதில் சொல்லியிருக்கிறார். அதற்குப் பெயர் உத்தவ கீதை

அதுசரி... உத்தவன் யார்?

கண்ணனுக்கு சின்னவயதிலிருந்தே தேரோட்டிக் கொண்டிருந்தவன் அவன் தானே.

குருஷேத்திரப் போர் முடிந்தது. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டி, தருமனுக்கு முடி சூட்டினார் கண்ணபிரான். அதன் பின் துவாரகைக்குத் திரும்பினார்.

தான் வந்த காரியம் முடிந்தது. அதனால் இளமையிலிருந்தே தனக்குத் தேரோட்டியாக இருந்து வந்த உத்தவனைக் கூப்பிட்டார். "உனக்கு வேண்டுமென்பதைக் கேள்" என்றார்.

அவன் 'தனக்கு' என்று எதையும் கேட்க ஆசைப்படவில்லை. இருந்தாலும் கேள்வி கேட்பதில் அவன் கெட்டிக்காரன் .அதனால் கேட்க ஆரம்பித்தான்.

"பரந்தாமா! இராச சூய யாகத்துக்கு தருமனைக் கூப்பிட்டு தன் அரண்மனையில் விருந்து வைத்தான் துரியோதனன்.அதன் பின் சூதாட்டத்துக்கு கூப்பிட்டான். தருமன் தோல்வியடைவது போல் செய்துவிட்டான்.

நீங்கள் தான் முக்காலமும் உணர்ந்தவராயிற்றே... சூதாட்டத்தில் தருமர் ஜெயிப்பது போல் செய்திருக்கக்கூடாதா? பகடைக்காயை உருட்டும் போது நீங்கள் எதிர்பார்த்தது விழுவது மாதிரிப் பண்ணியிருக்கலாமே!

சரி... அது தான் இல்லை... வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த பீமன், அர்ச்சுணன், நகுலன், சகாதேவன் இவர்களைப் பணயம் வைத்து ஆடும் போதாவது காப்பாற்றியிருக்கலாம். அதையும் நீங்கள் செய்யவில்லை.

பாவம்... அந்த அபலைப் பெண்! ஒன்றுமறியாத உன் சகோதரி... திரௌபதி.

"அவள் அதிஷ்டக்காரி! அவளைப் பணயம் வைத்து ஆடு... ஜெயித்து விட்டால் இழந்த நாடு, நகரங்களையெல்லாம் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்'' என்கிறான் துரியோதனன். அந்த சமயத்திலாவது பாண்டவர்களுக்கு வெற்றி கிடைக்கும் படி பண்ணியிருக்கக்க கூடாதா?

அப்பொழுதெல்லாம் சும்மா இருந்து விட்டு ... அந்தப் பெண்ணை துச்சாதனன் இழுத்துக் கொண்டு வந்து துகில் உரியும் கட்டத்தில் காப்பாற்றினாயே...இது நியாயமா? முறையா? அறமா? இதுதான் உத்தவன் கேட்ட கேள்வி.

இதற்குப் பரந்தாமன் பதில் சொல்கிறார்.

''அப்படிக் கேள் உத்தவா! தருமனைத் துரியோதனன் சூதாட அழைக்கும் போது என்ன சொன்னான்? நான் பணயம் வைக்கிறேன். எனக்குப் பதிலாக என் மாமன் சகுனி பகடைக்காய்களை உருட்டுவான்" என்று சொன்னான்.

உடனே தருமன் என்ன சொல்லியிருக்கலாம்? எனக்குப் பதிலாக என் மைத்துனன் கண்ணன் பகடைக்காய்களை உருட்டுவான் என்று சொல்லியிருக்கலாமே அப்படிச் சொல்லவில்லை.

என்ன செய்தான் தெரியுமா?துரியோதனன் கூட சூதாட்டத்துக்கு சம்மதித்து விட்டோம். கடவுளே! இது என் மைத்துனன் கண்ண பிரானுக்கு தெரியக்கூடாது என்று வேண்டிக் கொண்டான். இதனால் தருமன் எனக்கு மனதால் தடைபோட்டு விட்டான்.

அதனால் அரண்மனைக்கு வெளியிலேயே என்னைக் கூப்பிடுவார்கள் என்று காத்துக் கொண்டிருந்தேன்.பீமன், அர்ச்சுனன் நகுலன், சகாதேவன், திரௌபதி இவர்களை பணயம் வைத்து ஆடும்போதாவது கூப்பிடுவார்கள் என்று பார்த்தேன். அப்பொழுதும் அவர்கள் என்னை நினைக்கவில்லை.

திரௌபதியை துச்சாதனன் கூந்தலைப்பிடித்து இழுக்கிறான். அப்பொழு து கூட அவள் தன் உடல் பலத்தால் தடுக்க முயற்சித்தாளே தவிர என்னை நினைக்கவில்லை.

துரியோதனன் சபைக்கு இழுத்துச் செல்லப்பட்ட திரௌபதி அறநூல்களையும் அரச நீதியையும் சொல்லிக் கொண்டிருந்தாளே தவிர என்னை நினைக்கவில்லை. துகில் உரியும் கட்டத்தில் தான் ஹரி... ஹரி... கண்ணா! பரந்தாமா! என்று கூப்பிட்டாள். அதனால் தான் அப்பொழுது போய் நான் காப்பாற்றினேன்," என்றான் பரந்தாமன்.

அப்படியானால் யாராவது அழைத்தால் தான் நீங்கள் போவீர்களா? நீங்களாகப் போக மாட்டீர்களா?என்று கேட்டான் உத்தவன்.

''ஆமாம் நான் அழைத்தால் தான் போவேன். மனிதர்கள் செய்யக்கூடிய செயல்களையெல்லாம் அவரவர் போக்கிலேயே விட்டிட்டுப் பார்த்துக் கொண்டிருப்பேன். நான் குறிக்கிட்டு ஒன்றுமே செய்மாட்டேன் என்றான்" பரந்தாமன்.

"மனிதன் தவறு செய்தால் திருத்தமாட்டாயா? சும்மா பார்த்துக் கொண்டுதான் இருப்பாயா?"என்று கேட்டான் உத்தவன்.

"நான் மனிதனின் உள்ளத்தில் இருக்கும் போது என் எதிரில் மனிதன் தவறு செய்யமாட்டான்" என்றான் கண்ணன்.

"யார் நினைக்கிறார்களோ அவர்களுடைய உள்ளத்தில் எல்லாம் அவன் இருக்கிறான். அப்படியிருக்கும்போது தவறு செய்ய மனிதன் அஞ்சுவான்" இதுதான் உத்தவ கீதை.

இந்தக்காலத்திலும் சில பேர் பகவான் மாதிரி அடுத்தவர்கள் கஷ்டப்படுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது உண்டு.

அன்றைக்கு அப்படித்தான்... நடுத்தெருவில் ஒரு திருடனைப்பிடித்து எல்லோரும் சேர்ந்து அடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு ஆள் மட்டும் தள்ளி நின்று அதை வேடிக்கை பார்த்து சிரித்துக் கொண்டிருந்தான்.

"என்ன இது... அந்த ஆளைப்போட்டு இப்படி அடிக்கிறாங்களே" என்றேன்.

''அடிக்கட்டும் சேர். அவன் அடிவாங்கவேண்டிய ஆள்தான்'' என்றான் அந்த ஆள். 'ஏன் அப்படிச் சொல்கிறீங்க?" என்று கேட்டேன்.

பின்னே என்ன சேர் ... நான் ஒருவரின் பையிலிருந்த போர்சை எடுக்க முயற்சி செய்து கொண்டிருந்தேன். அதற்குள் அவன் முந்திக் கொண்டு அதை அபேஸ் செய்திட்டானே... பார்க்கிறது நான்... எடுத்துக்கிறது அவனா...? என்ன சேர் நியாயம் இது? நல்லா வாங்கட்டும் என்கிறான்..

பரந்தாமன் தான் இந்த உலகைக் காப்பாற்ற வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் மன்னார் பணிமனை மூடப்பட்டது

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் பணிமனை மூடப்பட்டுள்ளது. இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1995 ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த மன்னார் பணிமனை முசலி, நானாட்டான், மன்னார் பட்டினம் மற்றும் மாந்தை மேற்கு ஆகிய நிர்வாகப்பிரிவுகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழ ங்கி வந்தது. இந்நிலையில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற் கமைவாக மன்னார் பணிமனை மூடப்பட்டது.

இதேவேளை குடும்பச்சந்திப்புகளுக்கான பயணக்கொடுப்பனவு உதவித்திட்டமானது இல.25, வயல் ஒழுங்கை, சின்னக்கடை மன்னார். (தொ.பே.024 32 45287) என்ற முகவரியில் அமைந்துள்ள கட்டடத்தில் இயங்கும். எனவே இத்திட்டத்தின் மூலம் தடுப்புக்காவலில் உள்ள தமது உறவினர்களைச் சென்று பார்வையிடு வதற்கான பயணச் செலவு கொடுப்பனவை பொதுமக்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

(ஸ்ரீ)

## மழை காரணமாக பூநகரி-பரந்தன் பிரதான வீதி கடுமையாகப் பாதிப்பு

### போக்குவரத்தை மேற்கொள்வதில் இடையூறு

(பூநகரி)

கடந்த சில தினங்களாக பூநகரிப் பகுதியில் பெய்த கடும் மழையினால் பூநகரி-பரந்தன் பிரதான வீதியின் பல இடங்களிலும் அரிப்பு ஏற்பட்டு வாகனங்களைச் செலுத்த முடியாத அவல நிலையில் காணப்படுகிறது.

நேற்றுவரை ஐந்து இடங்களில் வீதிக்கு மேலால் நீர் பாய்ந்த வண்ணம் உள்ளது.

இதனால் முல்லைதீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பேருந்துகள் உரிய நேரத்தில் பயணிக்க முடியாத நிலை இருப்பதனால் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர் கொள்கின்றனர்.

(ஸ்ரீ-84)

## தனியார் பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்களை ஆராய்வதற்கு விசேட குழு

(கொழும்பு)

தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து ஆராயும் நடவடிக்கையில் விசேட குழுவொன்றை ஈடுபடுத்துவதற்கு உயர் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தக் குழுவினர் முன்னறிவித்தலின்றி தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று, அதன் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வார்களென அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

இதன் போது குறிப்பிட்ட கல்வி நிறுவனங்கள் உரிய தரத்திலான சேவையை வழங்கு கின்றனவா என்பது தொடர்பாகவும் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

தனியார் பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கானதரநிர்ணயங்களைப் பரிந்துரை செய்வதற்கான சபையொன்றும் ஸ்தாபிக்கப்படவுள் ளதாக உயர் கல்வி அமை ச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 80 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 160 | 100 |
| பாகற்காய் | 130 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 40 |
| பயற்றங்காய் | 150 | 140 | 110 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 70 | 80 | 60 |
| கறிமிளகாய் | 150 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 250 | - | 180 |
| போஞ்சி | 100 | 40 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 100 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |

## இலவச பாடநூல் விநியோகம் டிசெம்பர் 8 இல் ஆரம்பம்

இலவச பாடநூல் விநியோகம் நாடளாவிய ரீதியில் இம்மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல கோட்டக்கல்வி அலுவலகங் களுக்கும் 50 தொடக்கம் 60 வீதம் வரையான புத்தகங்களே இதுவரை கிடைத்துள்ளன. இருப்பினும் டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி இவ் வைபவத்தை நடத் துமாறு வடமாகாணக் கல்விப் பணிப் பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-19)

## இராசி பலன்

*01.12.2010*

*(கார்த்திகை 15, புதன்கிழமை)*

*தசமி காலை7.59 மணிவரை*

*ஏகாதசி பின்னிரவு 5.48 மணிவரை*

*அத்தம் முன்னிரவு 10.51 மணிவரை*

*ஸ்மார்த்த ஏகாதசி விரதம்.*

**மேடம்**

கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாக அமையலாம், சுவாரஸ்யமான நாள், கண்ணன் வழிபாடு மகிழ்ச்சியைத் தரும், தொழில் வளர்ச்சி உண்டு.

**இடபம்**

தொழில் வளர்ச்சி ஏற்படும், சொத்துக்கள் வாங்குவதில் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் ஏற்படும், பிள்ளைகளின் வளர்ச்சியைக்கண்டு பெருமையடைவீர்கள்.

**மிதுனம்**

நினைத்த காரியம் நிறைவேறும் நாள், தாய் வழி உறவினர்களால் தக்க நேரத்தில் உதவிகள் கிடைக்காம், தொலைபேசி வழித்தகவல் தொழில்வளர்ச்சிக்கு உதவும்.

**கடகம்**

தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், தொழில்ரீதியான பயணம் அனுகூலம் தரும், பணவரவு திருப்தி தரும்.

**சிங்கம்**

தொழில் முன்னேற்றம் காணப்படும், பொருள் வரவிற்கு அத்திவாரமிடுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி**

வரவிற்கேற்ப செலவுகள் உருவாகும்,குடும்பத்தினருடன் விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது, உறவினர் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம்.

**துலாம்**

வழக்கமாகச் செய்யும் பணியை இன்று மாற்றியமைப்பீர்கள்,மன அமைத்திக்காக ஆன்மீகத்தில் நாட்டம் காட்டுவீர்கள்,சுப செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்**

பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் கூடும், உறவினர் வருகையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**தனுசு**

அதிகாரத்துடன் செயற்படும் நாள், புகழ் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்.

**மகரம்**

கூட்டு முயற்சி வெற்றியாகும், பகை ஒன்று நட்பாகலாம், சொத்துக்களிலிருந்த பகை மாறும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்.

**கும்பம்**

வாழ்க்கைத் துணைவழியில் மனக்கசப்பு ஏற்பட்டு அகலும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது, தொழிலில் கவனம் தேவை.

**மீனம்**

கணவன் - மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கரவெட்டி செய்தியாளர்)

# கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் இயங்கிவந்த கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் யாழ்.மாவட்ட காரியாலயமானது இன்று புதன்கிழமை தொடக்கம் திருநெல்வேலி விவசாயத்திணைக்களத்திற்கு அருகாமையில், முன்பு நல்லூர் பிரதேசசெயலகம் இயங்கிய கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கும் என யாழ்.கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# யுத்த காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகளை அகற்றி போக்குவரத்தை இலகுபடுத்த வேண்டும்

## வலி.வடக்கில் மீள்குடியேறிய மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் இருபது வருடங்களிற்கு பின்பு மீள் குடியேற்றப்பட்ட இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, விந்தகபுரம் ஆகிய மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளிலுள்ள மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

யுத்த காலத்தில் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட மண் அணைகள் அகற்றப்படாமையே இதற்கான காரணம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். மீள்குடியமர்ந்த மக்களிற்கான மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று பன்னாலை சேர். கனகசபை அ.த.க.பாடசாலையில் நடைபெற்றது.

இதன்போது மக்கள் தமது குறைகளைத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் நாம் இருபது வருடத்திற்கு பின் சொந்த இடங்களிற்கு குடியமர வந்துள்ளோம். இங்கே எமக்கு தொழில் மேற்கொள்வதற்கு விவசாய உபகரணங்கள், முதலீட்டு உதவிகள் ஒழுங்கு செய்து தரப்பட வேண்டும்.

இவைதவிர ஏற்கனவே யுத்த காலத்தில் எமது விவசாய நிலங்கள், மண் அணைகள் இடப்பட்டு பாதிப்புற்ற நிலையில் மீண்டும் இராணுவத்தினரால் மண் அணைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையே. எமது எஞ்சிய உடைமைகள் திருடப்பட்டு வருகிறது.

இதற்கு அரசு தரப்பினர் பாதுகாப்பு வழங்கி எமது உடமைகளை மீட்டுத்தர வேண்டும்.

விடுவிக்கப்பட்ட பகுதியில் மிதிவெடி அபாயம் காரணமாக மக்கள் மீள்குடியேறாமல் உள்ளனர். இதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி திருட்டு நடவடிக்கையில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, பாதுகாப்பு நடவடிக்கையை துரிதப்படுத்தியும், போக்குவரத்தை இலகுபடுத்தியும் தருமாறும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஸ்ரீ-2-6)

# மாவட்ட கண்காணிப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான டிசம்பர் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனவும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)




# பரிசளிப்பு வைபவம்

(சாவகச்சேரி)

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் நடத்தப்படும் விழிப்புணர்வு மற்றும் பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ரி.தயாளன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாண தாய்சேய் நல வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமதி திருமகள் சிவசங்கர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளனர். (ஸ்ரீ-29)

# ஆங்கில வாசிப்பு கையேடுகள்

(யாழ்ப்பாணம்)

யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின் வெளிச்சவீடு பாடசாலை அலகு யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டில் தரம் 7,8,9 இல் கற்கும் மாணவர்கள் இடையே ஆங்கில வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் பொருட்டு " Lady bird" கதைகள் அடங்கிய கையேடுகளை இலவசமாக விநியோகிக்கவுள்ளது.

கையேடுகள் அடங்கிய பொதிகளை பாடசாலை அதிபர்கள் தமது கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியுமென பாடசாலை அதிபர் எம்.மகேந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்ட திறந்த வினா விடைப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவினரால் அண்மையில் நடாத்தப்பட்ட திறந்த வினாவிடைப்போட்டி முடிவுகள் அறி விக்கப்பட்டுள்ளன.

இதில் முதலாமிடத்தை எஸ்.சுகன்யா (உசன் இராமநாதன், மகாவித்தியாலயம்), இரண்டாமிடத்தை இ.நித்தியா (வரணி வடக்கு), மூன்றாமிடத்தை அ.பாமினி (கச்சாய் தெற்கு) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

**ஆறுதல் பரிசுகள்**

செ.நிலக்சன் (பாலாவி வடக்கு), ப.கஸ்தூரி (மீசாலை கிழக்கு), பி.அகல்யா (ப.நோ.கூ.சங்கம் சாவகச்சேரி), க. கணேஸ்வரி (மீசாலை கிழக்கு), சி.செல்வக் குமார் (டச்சுவீதி, சாவகச்சேரி), ச.பிரகாசினி(புதுவீதி கொக்குவில்மேற்கு), ஆ.நிஷாந்தி (கரம்பைக்குறிச்சி),எம்.எச்.எம்.கனா (சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை), ஆர். தீபா (வரணி வடக்கு) , ஸ்ரீ. வக்சலா (நுணாவில் கிழக்கு கல்வயல் ஆகியோராவர்.

இவர்களுக்கான பரிசில்கள் இன்று புதன்கிழமை காலை 9.30மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ-29)



யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு பாரம்பரிய மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா போட்டோ பிரதி இயந்திரம் ஒன்றை அண்மையில் அதிபர் மா. நவநீதமணியிடம் பாடசாலையில் வைத்து கையளிப்பதைப் படத்தில் காணலாம்.(படங்கள்:- கரவெட்டி செய்தியாளர்)

# வெள்ளம் தேங்கியுள்ளதால் வீதியால் பயணிப்பதில் சிரமம்

(கொழும்புத்துறை)

கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள பாணன் குளம் நாச்சிமார் கோவில் சுற்றாடலில் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

அக்கோயில் பின் வீதியும் அதன் சுற்றுப் புறங்களிலும் நீர் வற்றாமல் காணப்படுவதால் வீதியால் பயணிக்க முடியாதுள்ளதுடன் அருகில் உள்ள இராணுவ சிவில் அலுவலகம் முற்றாக சேதமடைந்துள்ளது.

மேற்படி பகுதியில் இருபதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள னர். (ஸ்ரீ-51)

# அணைக்கட்டு சேதமடைந்து தூர்ந்த நிலையில் காணப்படும் உப்புக்குளம்

(கொழும்புத்துறை)


கொழும்புத்துறை உப்புக்குளத்தின் ஒருபகுதி தூர்ந்த நிலையில் காணப்படுகின்றது.

மேற்படி குளத்தில் அணைக்கட்டு சேதமடைந்து காணப்படுவதால் குளம் தூர்ந்த நிலையில் காணப்படுகிறது.

இதேவேளை வெள்ளக்காடாக காட்சி தரும் சேதமடைந்த அணைக்கட்டுப் பகுதிகளில் யாரையும் நடமாட வேண்டாம் என கொழும்புத்துறை கிழக்கு சனசமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-51)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





ஆயிரம் பாடசாலைகள் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பில் பாடசாலைத் தெரிவு தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் யாழ்.கல்வி வலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அமர்ந்திருப்பதையும் இதில் பங்குபற்றிய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்.என்.குமார்)

# முன்கூட்டியே ஓய்வு பெறுபவர்களுக்கு நோய்கள் ஏற்படும் சாத்தியம் குறைவு

## ஆய்வில் தகவல்

முன்கூட்டியே ஓய்வு பெறுபவர்களுக்கு நோய்கள் ஏற்படும் சாத்தியம் குறைவு என அண்மைய ஆய்வுத் தகவலொன்று சுட்டிக் காட்டியுள்ளது.

குறிப்பாக உளச் சுகாதாரத்திற்கு மிகவும் உசிதமானதென ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரான்ஸில் 14ஆயிரம் பணியாளர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த உண்மை வெளிப்பட்டுள்ளது.

முன்கூட்டியே ஓய்வு பெறுவதன் மூலம் மன அழுத்தங்களிலிருந்து விடுபடக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் முன்கூட்டியே ஓய்வு பெறுவதனால் உடல் ஆரோக்கியத்தில் மாற்றம் ஏற்படுமா என இந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்படவில்லை.

• ஓய்வின் பின்னர் எந்தவொரு பணியையும் ஆற்றாமல் இருத்தல் வேறு நோய்களை உண்டு பண்ணும் என முன்னைய ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக ஓய்வு பெற்றதன் பின்னர் எந்த விதமான கடமைகளை செய்யாதவர்களுக்கு இருதய நோய் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அதிகளவு அழுத்தம் நிறைந்த தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்டாயமாக ஓய்வு பெற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படும் போது பணியாளர்கள் உளவியல் ரீதியான பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பரீட்சை ஒத்திவைப்பு

## பொலிஸ் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தெரிவுக்காக நடத்தப்படவிருந்த பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சையை எதிர்வரும் 5ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

அதில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அதன்படி குறிப்பிட்ட பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறும் என்றும் அத்துடன் முன்னர் வழங்கப்பட்ட பரீட்சை அனுமதிப் பத்திரம் அன்றைய தினத் துக்கும் செல்லுபடியாகும் எனவும் திணைக் களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஶ்ரீ-2)

# அவசர அவசரமாக பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகள்

(கிளிநொச்சி)

தனியார் மற்றும் அரச பேருந்துகளில் பயணிகள் அவசர கதியில் ஏற்றப்படுவதால் விபத்துகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

கிளிநொச்சி பிரதான சாலையில் சில தனியார் மற்றும் அரச பேருந்துகளில் பயணிகள் ஏறும் முன்பாக சாரதிகள் பேருந்தை செலுத்த முற்படுகின்றனர்.

இதனால் நிலை தடுமாறும் பயணிகள் விபத்தில் சிக்கி உயிராபத்தை எதிர் கொள்ளும் சாத்தியம் உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

குறித்த நேரத்திற்கு குறிப்பிட்ட இடத்திற்கு செல்ல வேண்டும் என்ற காரணத்தாலும் ஏனைய பேருந்துகளை முந்திச் செல்ல வேண்டும் என்ற போட்டி மனப்பாங்குடன் சாரதிகள் செயற்படுவதனாலேயே இவ்வாறு அவசரமாகப் பயணிகள் பேருந்துகளில் ஏற்றப்படுகின்றனர்.

எனவே, இவ்விடயத்தில்பேருந்து சாரதிகள் அலட்சியப் போக்குடன் செயற்படாமல் சமூகப் பொறுப்புடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (ஶ்ரீ)

# ஹைகோப் ஆயுத ஊழல் வழக்கு ஒத்திவைப்பு

ஹைகோப் ஆயுத ஊழல் வழக்கு விசாரணையை கொழும்பு மேல்நீதிமன்றம் எதிர்வரும் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

இராணுவ நீதிமன்றத்தை நீதிமன்றமாக ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது தொடர்பில் உயர்நீதிமன்றம் தீர்ப்பை வழங்கும் வரையில் இந்த விசாரணையை ஒத்திவைப்பதென கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

ஹைகோப் வழக்கில் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா அவருடைய மருமகன் தனுன திலகரட்ன மற்றும் ஹைகோப் நிறுவன பணிப்பாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று கொழும்பில் மேல் நீதிமன்றத்தில் கருத்துரைத்த அரச சட்டவாதி, தமித் தொட்டவத்த இராணுவ நீதிமன்றத்தை நீதிமன்றமாக ஏற்றுகொள்ளலாமா என்பது தொடர்பில் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிட்டார்.

இந்தத் தீர்ப்பு எதிர்வரும் 6 ஆம் திகதி வழங்கபடும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து மேல்நீதிமன்றம் ஹைகோப் வழக்கை எதிர்வரும் ஜனவரி 14 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (ஶ்ரீ-2)


## அறிவித்தல்

**120 அடி உயரமுள்ள தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்.**
**கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.**

"இல.243,கச்சேரி நல்லூர் வீதியில் (120')நூற்றியிருபது அடி உயரமுள்ள தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு Etisalat Lanka (Pvt) Limited நிறுவனத்தினரால் அனுமதிகோரி யாழ்.மாநகர சபைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே இத்தொலைத்தொடர்பு கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள் இத் தொலைத்தொடர்பு கோபுரம் இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்பு தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத்திகதியில் இருந்து பதினைந்து (15) நாட்களினுள் யாழ்.மாநகரசபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்"

**மாநகர முதல்வர், மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(சு/1710)





வயாவிளான் குட்டியப்புலம் அ.த.க.பாடசாலையில் கல்விகற்கும் வறிய மாணவர்களிற்கு யாழ்.எயிட் நிறுவனத்தினால் காலணிகளும் கற்றல் உபகரணங்களும் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மத்திய வங்கியின் வட வலய பொது முகாமையாளர் எல்.சிறிதரன் மாணவனுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் மேற்குறித்த மாணவர்களுடன் யாழ்.எயிட் நிறுவன பணிப்பாளர் ஆர்.தர்மினி, பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கு மனோ கணேசன் கண்டனம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலே நடைபெறுவதாக கூறப்படும் அத்துமீறிய குடியேற்றங்களுடன் ஒப்பிட்டு கொழும்பிலே தமிழ் பேசும் தமிழர்



களும் முஸ்லிம்களும் வாழ்வது தொடர்பிலே ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்து கண்டனத்துக்குரியதாகும். கொழும்பு இலங்கையின் தேசிய அரசியல் பொருளாதார தலைநகரம் என்பதை அரசாங்கம் மறந்துவிட்டதா? என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் மனோகணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஸ்ரீஜயவர்தனபுர கோட்டை இலங்கையின் தலைநகரமாக சொல்லப்பட்டாலும் நடைமுறையில் கொழும்பு மாநகரமே இலங்கையின் தலைநரமாக செயற்படுகின்றது. தமிழர்களின் கொழும்பு மாநகர இருப்பு சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இருக்கின்றது.

எனவே தமிழர்கள் கொழும்பிற்கு புதிதாக வந்துவிட்டார்கள் என எவரும் கண்டு பிடித்து கூறமுடியாது. அத்துடன் இன்று கொழும்பு பொருளாதார தலைநகரமாகவும் இருக்கின்றது. இக்காரணத்தினாலேயே மலையகத்திலிருந்தும் வடகிழக்கிலிருந்தும் தமிழ் பேசும் மக்கள் கொழும்பிற்கு சமீப காலத்தில் பெருமளவில் குடிபெயர்ந்துள்ளார்கள்.

தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அரச தொழில் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. அரச சார்பான காணி மற்றும் வளங்கள் பகிர்ந்தளிக்கப்படும் பொழுது தமிழ்பேசும் மக்களுக்கு பாரபட்சம் காட்டப்படுகின்றது.

குறிப்பாக இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் வர்த்தகம் செய்து வந்த தமிழர்களும் படிப்படியாக விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள். எஞ்சியிப்பவர்களும் பெரும் அச்சத்துடனே வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இது போல் முஸ்லிம் மக்களும் தங்களது வர்த்தக நோக்கங்களுக்காக கொழும்பை நாடி வருகின்றார்கள். தமிழ் பேசும் மக்கள் எந்த வித அரச ஆதரவுமின்றி சொந்த முயற்சியால் தலைநகரத்திலே வாழ நினைப்பது தவறாகுமா?

இதற்கு மேலாக எதிரணியில் இருந்து அரசாங்கத்திற்கு தாவிய தமிழ் முஸ்லிம் எம்.பிக்களும் அமைச்சர்களும் நமது மக்கள் தொடர்பான அடிப்படை உண்மைகளை அரசாங்கத்திற்கு எடுத்துக்கூறவேண்டும்.

பாராளுமன்றத்திலே உரையாற்றிய நமது மக்கள் மத்தியிலே நம்பிக்கையை ஏற்படுத்திட வேண்டும். மேல் மாகாணத்தில் கிரிபத்கொடையில் கூட தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் வர்த்தகம் செய்ய முடியாது என்ற எழுதப்படாத விதி இன்று இருக்கின்றது. இந்த உண்மைகளை உணராதவர்கள் சமீபகாலமாக கொழும்பிலே வாழும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக கருத்துக்களை தெரிவித்து வருகிறார்கள்.

இந்த அடிப்படையிலேயே கொழும்பிலிருந்து சிறுபான்மை மக்களை அப்புறப்படுத்த எண்ணுகின்றார்கள். அரச தொழிலும் இல்லை. சொந்த முயற்சியால் வர்த்தகமும் செய்ய முடியாது என்ற நிலையில் தமிழ் பேசும் மக்கள் தங்களது வாழ்வாதாரங் களுக்காக என்னதான் செய்வது என்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

## உறக்கத்தில் இருந்த போது தங்கச்சங்கிலி அபகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆனந்த நகர் பகுதியிலுள்ள வீடொன்றினுள் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு ஒரு மணியளவில் கிளிநொச்சி ஆனந்த நகர் அம்மன் வீதியில் உள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது.

இது குறித்து தெரிய வருவதாவது,

வீட்டு உரிமையாளரும் அவரது மனைவியும் இரவு நேரத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையில் மனைவியின் கழுத்தில் இருந்த 11/2 பவுண் தங்கச் சங்கிலியை திருடர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)


## R.B.BOOKING CENTRE

(ஆஸ்பத்திரி வீதியில் இல.15, பெரிய கடை, யாழ்ப்பாணம்)
நவீன சந்தைக்கும் மரக்கறி மாக்கற்றுக்கும்
இடையில் J/DS/BR/655

யாழ் - கொழும்பு செல்லும் பிரயாணிகளின்
கவனத்திற்கு

யாழ். நகரில் 30 வருட காலமாக மக்களின் நன்மதிப்பை பெற்று அன்று தொடக்கம் இன்றுவரை பஸ் ஆசனங்களை பதிவு செய்து வரும் அரச அங்கீகாரம் பெற்ற RB பஸ் ஆசனப்பதிவகத்தில் 01.12.2010 தொடக்கம் சகல பஸ் ஆசனங்களையும் எமது தலைமை காரியத்திலும் பண்ணை பஸ் நிலையத்தில் எமக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலும் பதிவு செய்து கொள்ளலாம் என்பதை சகல கொழும்பு செல்லும் பிரயாணிகளின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

| A/C BA LOON | N/ AC | Normal |
|---|---|---|
| TIP TOP | TIP TOP | சிற்றி |
| D.S. GUNASAKARA | D.S. GUNA | விஜய் |
| சுப்பர் லைன் | நல்லூர் கந்தன் | தனா |
| தின=கரன் | UNI | ABI |
| A.N.S | அனுராம் | D.S.Gunase |
| அன்னை முத்துமாரி | சென் நீக்லஸ் | J.R.B |
| ESWARAN | P.S.R | துஷானா |
| S.P.S | பாபு | ரெட்ணா |
| UNI | | அப்பலோ |
| RAMINA | | தர்விசன் |
| | | மகேஸ் |
| | | கருணா |
| | | பிருந்தா |
| | | ஐங்கரன் |
| | | S.D.R |

மற்றும் கண்டி, திருமலை, மட்டக்களப்பு, பதுளை, மொனராகலை ஆகிய இடங்களுக்கும் பஸ் ஆசனங்களை மேற்கொள்ளலாம் என்பதை பிரயாணிகளுக்கு மிகத் தாழ்மையுடன் அறியத் தருகின்றோம்.

R.B. Booking Centre

T.P: 021.222 7016
021.222 8356

(3153)


## 5 கிலோ தங்கத்தை எடுத்து செல்ல முயன்ற மூவர் விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)


கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக ஐந்து கிலோ தங்கத்தையும் ஏராளம் பணத்தொகையையும் எடுத்துச் செல்ல முயன்ற மூவர் நேற்று அதிகாலை சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பணத்தின் இன்னும் கணக்கிட்டு முடிக்கப்படவில்லை என்று சுங்கத் தீணைக்கள அதிகாரியொருவர் நேற்று தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் மூவரும் தங்கத்தையும் பணத்தையும் மறைத்து எடுத்துச் செல்ல முற்பட்ட போதே பிடிபட்டுள்ளனர். ஐந்து கிலோவுக்கும் அதிகமான தங்கம் தனியாகவும் பணம் ஆறு பைகளில் பகுதி பகுதியாகவும் மறைத்து வைக்கப்பட்டிருந்துள்ளது.

சுங்கப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக விமான நிலையப் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவிக்கின்றார்.

(ஸ்ரீ-2)



வலிகாமம் வடக்கில் 20 வருடங்களின் பின்பு மீள் குடியமர்ந்த மக்களிற்கு மிதிவெடி அபாயம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று பன்னாலை சேர் கன்கசபை அ.த.க.பாடசாலையின் பழைய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர் எம்.முரளிதரன், இராணுவ பொறியியல் பிரிவைச் சேர்ந்த டி.எச்.சுனில் சேனரத்தின ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18ஆவது அரசியலமைப்பிற்கான திருத்தமும் இலங்கையின் எதிர்காலமும்



சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா

18ஆவது அரசியலமைப்பைப் புரிந்து கொள்வதற்கு இத் திருத்தம் மேற் கொள்ளும் வரை இலங்கையில் நிலவிய சமூக அரசியல் பின்னணியை சுருக்கமாக ஆராய்வது நல்லது.

1. சுமார் 40 ஆண்டுகளாக அவசரகாலச் சட்டத்தின் கீழும், சுமார் 30 ஆண்டுகளாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும், மக்களின் உரிமைகள் மிக மோசமாக ஒடுக்கப்பட்டன. சமாதானம் நிலவிய போது மெதுவாகவும்,மோதல் காலத்தில் உக்கிரமாகவும் துரிதமாகவும் பொது மக்கள் சுதந்திரத்தை இழந்தனர்.

2.இக்காலகட்டத்தில் பல்வேறு ஆட்சியாளர்களின் கீழ் இடம்பெற்ற காணாமற்போகச் செய்தல்,தாக்குதல் நடத்துதல்,படுகொலை என்பன ஒடுக்குமுறைச் சட்டங்களின் கீழ் பலவந்தத்துடன் மூடிமறைக்கப்பட்டன.

3. இவ்வடக்குமுறைச் சட்டங்கள், நாட்டின் சட்டத்திற்கும் சர்வ தேச மனித உரிமைகள் கொள்கைகளுக்கும் சமவாயங்களுக்கும் முரணானவை, ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு முகவர் நிலையங்கள் இச் சமவாயங்களை அனுசரிக்குமாறு விடுத்த விண்ணப்பங்கள் பொருட்படுத்தப்படவில்லை.

4.தொடர்ந்தும் இந் நிலைமையின் கீழ் அடுத்து ஆட்சிபீடம் ஏறும் ஆட்சியாளர்கள் முன்னைய ஆட்சியாளரைவிட உரிமைகளை மீறுவதையே காண முடிந்தது.

5.காணாமற்போகச் செய்தல், படுகொலைகள் பற்றிய விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டாலும் அவற்றின் அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

6.இத்தகைய ஆட்சியாளர்களின் ஆட்சியின் கீழ் இடையிடையே தேர்தல்கள் இடம்பெற்றாலும், அவற்றில் வெற்றியீட்டுவதற்கு அரச அதிகாரமும்,அரச வளங்களும், அரச ஊடகங்களும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு அதிகாரம் கொள்ளையடிக்கப்பட்டது. இந்த ஆட்சியாளர்களின் ஆட்சியின் கீழ் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்கள் நடைபெறவில்லை.

7.ஆட்சியாளர்கள் அல்லது அவர்களோடு தொடர்புடையவர்கள் அரச வளங்களை கையக்கப்படுத்தி ஊழல் மோசடிகளில் ஈடுபட்டாலும் எந்தவொரு சம்பவமும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்படவில்லை. உலகில் ஊழல் மலிந்த நாடுகளில் இலங்கை ஒன்றாகக் கருதப்பட்டது.

8.தமது அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு,தமக்கும் தமது அடிவருடிகளுக்கும் சார்பாகப் பயன்படுத்தும், விகாரமான ஊடகமாக அரச ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன. தனியார் அல்லது மாற்று ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையால் மக்களின் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது.

9.சந்தேக நபர்கள் சித்ரவதை செய்யப்படல்,வழக்குத் தொடராமல் கைதிகளாக சிறைவைக்கப்படல், பொய்க்குற்றச்சாட்டுக்களை சுமத்தி வழக்குத் தொடர்தல் என்ற வகையில் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது.

10.குற்றங்களைப்புரிவோர் சட்டத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதில் உள்ள வழிமுறைகளின் பலவீனங்கள் காரணமாக பாதாள உலகத்தவர்கள்- கொள்ளைக்காரர்கள் என முத்திரை குத்தி சட்டத்திற்கு மாறாக மனிதர்களைப் பகிரங்கமாக கொலை செய்வது தொடர்ச்சியாக இடம் பெற்றது. தற்போது கிட்டத்தட்ட 50 பேர் இவ்வாறாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

11.நீதிமன்றத் தீர்ப்புக்களும் பொருட்படுத்தப்படவில்லை. உதாரணம்:- ஒரு லீற்றர் பெற்றோல் 100 ரூபாய்க்கு விற்கப்பட வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பளித்ததை பொருட்படுத்தாமல் லீற்றர் 130 ரூபாய்க்கே விற்கப்பட்டது. உயர் நீதிமன்றம் குற்றவாளி எனத் தீர்ப்பளித்த கலாநிதி ஜயசுந்தர மீண்டும் குற்றமற்றவர் என அதே உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. உயர் நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மை இல்லாதொழிக்கப்பட்டு அது நிறைவேற்றுத்துறைக்கு ஏவல் செய்யும் நிறுவனமாக மாற்றப்பட்டது.

மேற்கூறிய சம்பவங்களுக்கு அமைய அரச இயந்திரத்தின் முக்கிய மூன்று கருவிகளான, சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகிய நிறுவனங்கள் செயலிழந்து பெயரளவிலான நிறுவனங்களாக மாறி உள்ளன. நிறைவேற்றுத்துறை சகல அரச நிர்வாகத்துறைகளையும் நிறைவேற்றுத்துறை வடிவத்தில் கையகப்படுத்தாது தனிநபர் வடிவத்திலேயே கையகப்படுத்தியுள்ளது. இங்கு ஒரு தனி நபரையே காண முடியும். நிறை வேற்றுத்துறையை காணமுடியாது. அவரின் நடவடிக்கைகள் நிறைவேற்றுத்துறையின் நடவடிக்கைகள் அல்ல. அவை நிறைவேற்றுத்துறையின் பெயரால் செய்யப்படும் தான்தோன்றித் தனமான நடவடிக்கைகளாகும். நிறைவேற்றுத் துறைக்கு அதாவது அந் நபருக்குத் தேவையான சட்டங்களையே சட்டவாக்கத்துறை அங்கீகரிக்கின்றது. இந் நபருக்குத் தேவையான தீர்ப்புக்களையே நீதித்துறை வழங்க வேண்டும். இத் தனிநபரின் ஏகோபித்த அதிகாரம் 1978 முதல் படிப்படியாக வளர்ச்சியடைந்து உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

### உடைமையாக்கிய, உடைமையாக்கிக் கொண்ட ஏனைய அதிகாரங்கள்

1978 ஆம் ஆண்டில் மிகப்பாரிய அதிகாரங்கள், ஜனாதிபதியால் தனது உடைமையாக்கிக் கொள்ளப்பட்டன. அது படிப்படியாக அதிகரித்ததோடு நடைமுறையில் எதுவித கட்டுப்பாடும் இன்றி மேன்மேலும் அதிகாரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இவ்வதிகாரங்கள் காரணமாக மனித உரிமைகள் மீறப்பட்டன. அதிக பொருளாதாரச் சுமை சிருஷ்டிக்கப்பட்டது. அவ்வாறான அதிகாரங்கள் பின்வருமாறு,

1. ஜனாதிபதி அரசின் தலைவராவர்.

2. அரசாங்கத்தின் தலைவராவர். (1978 க்கு முன்னர் அரசின் தலைவராக ஜனாதிபதி அல்லது ஆளுநர், பிரதமர் திகழ்ந்துள்ளனர்.)

3. நிறைவேற்றுத் துறையின் அமைச்சரவையின் தலைவர் அரசியலமைப்பின் உறுப்புரை. 30(1)

4.ஆயுதந்தாங்கிய படைகளின் படைத் தலைவர் உறுப்புரை. 30 (1)

5. பதவிக்காலம் தொடங்கியதிலிருந்து 4 ஆண்டுகள் முடிவடைந்ததன் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தலாம். உறுப்புரை 31(3அ)

6.நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டவரான தவறாளிக்கு கட்டற்ற ஒரு மன்னிப்பை, சட்ட முறையான நிபந்தனைகளுக்கு அமைந்த ஒரு மன்னிப்பை வழங்கலாம். தண்டனையை இடை நிறுத்தலாம் அல்லது விதிக்கப்பட்ட தண்டனைக்குப் பதிலாக கொடூரம் குறைந்த ஒரு தண்டனையை விதிக்கலாம். தண்டனையை நீக்கலாம். குடியரசுக்கு செல்மதியான தண்டனையை தளர்த்தலாம். உறுப்புரை 34(1)

7.ஜனாதிபதிக்கெதிராக வழக்குத் தொடர முடியாது. உறுப்புரை (35)

8.ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கு அவசியமான செயலாளர்களை தனது தற்துணிவுக்கு அமைய நியமிக்கலாம். உறுப்புரை 41(1)

9.அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதியே ஆவார். அமைச்சர்களை அவர் நியமிக்கலாம். அமைச்சர்களுக்கான விடயங்களையும் பணிகளையும் குறித்தொதுக்கலாம். உறுப்புரை 45(1)

10.அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சர் ஒருவருக்கு ஜனாதிபதி விரும்பிய விடயத்தை குறித்தொதுக்கலாம். உறுப்புரை 45(4)

11.ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை தனது உடைமையாக்கிக்கொள்ளலாம். உறுப்புரை 45(4)

12. அமைச்சரவைச் செயலாளரையும் அமைச்சுச் செயலாளர்களையும் ஜனாதிபதியே நியமிப்பார்.

13. பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் ஜனாதிபதிப் பதவியில் தொடர்ந்தும் இருப்பார்.

14. அரச தூதுவர்கள் , உயர் ஆணையாளர்கள்,அரசுப் பிரதிநிதிகள், இராஜதந்திர முகவர்கள் என்போரை நியமிக்க முடியும். உறுப்புரை 33(இ)

15.ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிக்க முடியும் .உறுப்புரை 33(இஇ)

16. இராணுவத்தளபதி, கடற்படைத் தளபதி,விமானப்படைத் தளபதி ஆகியோரை ஜனாதிபதியே நியமிப்பார்.

17. சட்டமா அதிபரையும் பொலிஸ்மா அதிபரையும் நியமிப்பார்.

18.பாராளுமன்றச் செயலாளர் நாயகம் நியமிக்கப்படுவார். உறுப்புரை 65(1)

19. அவசரகால விதிகளை ஆக்குவதற்கான அதிகாரம் உண்டு. உறுப்புரை76(2)

20. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை பாராளுமன்றத்திலிருந்து விலக்குவதற்கும் ஒருவர் மீது குடியியல் தகுதியீனத்தை விதிப்பதற்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களையும் ஜனாதிபதி நியமிக்க முடியும். உறுப்புரை 81 (1)

21. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தை மக்கள் தீர்ப்பிற்கென சமர்ப்பிக்க முடியும்.உறுப்புரை (86)

22. பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தவிசாளரும் ஏனைய நீதிபதிகளும் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்.உறுப்புரை 153 (1)

23.கணக்காய்வாளர் தலைமையதிபதி ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். உறுப்புரை 153(1)

24.நீதி சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் பிரதம நீதியரசர் என்போருக்கு மேலதிகமாக ஏனைய இரண்டு உயர் நீதிமன்ற உறுப்பினர்களையும் நியமித்தல் ஜனாதிபதியின் கடமையாகும். உறுப்புரை 107(1)

25. மாகாண சபைகளை ஸ்தாபித்தல் உறுப்புரை 154 (1)

26. மாகாண சபைகளுக்கான ஆளுநர்களை நியமித்தல். உறுப்புரை 154(ஆ)

27.நிருவாகத்திற்கான பாராளு மன்ற ஆணையாளரை அல்லது ஒம்புட்ஸ் மனை நியமிப்பதும் ஜனாதிபதியே. உறுப்புரை 156(2)

### ஜனாதிபதி தன்னிடம் ஒப்படைத்துக்கொண்ட அதிகாரங்கள்

28. பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்கள் .

29.நிதியமைச்சுப் பொறுப்புக்கள். பாராளுமன்ற கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அரசின் செலவீனங்களுக்கோ அல்லது தேர்தல் ஒன்றை நடத்துவதற்கோ திரட்டு நிதியில் இருந்து செலவு செய்வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. உறுப்புரை 150 (3)(4)

இதற்கு மேலதிகமாக அவசர எதிர்பாரா செலவுக்காக எதிர்பாரா சந்தர்ப்பங்களுக்காக நிதியம் அமைக்கப்பட்டுள்ளது. அந்நிதியத்தில் இருந்து நிதியமைச்சரே நிதி பெறவேண்டும். அதற்கு ஜனாதிபதியின் சம்மதத்தை நிதியமைச்சர் பெறவேண்டும். உறுப்புரை 151 (1) (2)

### ஏனைய அதிகாரங்கள்

30. முதலீட்டுச் சபை, தென்மாகாண அதிகார சபை,அதி வேகப் பெருந்தெருக்கள், துறைமுகங்கள் ,மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான கருத்திட்டங்கள் எதுவித பாராளுமன்ற சட்டமுமின்றி உருவாக்கப்பட முடியும்.

31. ஜனாதிபதி பிரதிநிதிப்படுத்தும் அரசியல் கட்சியின் தலைவரா வர்.

### ஜனாதிபதியின் அதிகாரங்களும் நாட்டு நிலையும்

31.ஜனாதிபதி அதிகாரங்கள் மேன்மேலும் அதிகரிக்கையில், எமது நாட்டில் மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்பட்டுள்ளன,சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்துள்ளது, பல்வேறு சமூக நெருக்கடிகள் உருவாகியுள்ளன. யுத்தத்தை ஒடுக்குவதற்கு மேற்படி அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்ற தர்க்கத்தை உருவாக்கியிருந்தாலும் யுத்தம் ஏற்படுவதற்கு ஒடுக்குமுறையும் ஜனாதிபதியின் அதிகாரமும் காரணமாக அமைந்தன என்பதை எவரும் வெளிப்படுத்துவதில்லை. நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதாயின் ஆட்சி கூடுதலாக ஜனநாயகமயப்படுத்தப்படவேண்டும். இதற்குப் பதிலாக முற்றிலும் முரணான நிலைமையே அமுலில் உள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைக்கு நோர்வே அரசு தொடர்ந்தும் உதவி

## ஒப்பந்தமும் கைச்சாத்து

(கொழும்பு)

கண்ணி வெடி அகற்றும் சுவிஸ் பவுண்டேசனுடனும் ஹலோ ரஸ்ட் அமைப்புடனும் இரண்டு ஒப்பந்தங்களை இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹில்டே ஹரால் ஸ்ரற்ட் கைச்சாத்திட்டுள்ளார்.



இந்த ஒப்பந்தங்களின் கீழ் கண்ணிவெடி அகற்றும் சுவிஸ் பவுண்டேசனுக்கு 125 மில்லியன் ரூபாய்களும் ஹலோ ரஸ்ட் அமைப்பிற்கு 112 மில்லியன் ரூபாய்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கை இலங்கை அரசாங்கத்தின் கண்ணிவெடி அகற்றும் மனிதாபிமான நடவடிக்கைக்கு உதவுவதாக அமையும்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைக்கு என இந் நிறுவனங்களை இலங்கை அரசாங்கம் ஈடுபடுத்தியுள்ளது.

கண்ணிவெடியகற்றும் இந்த மனிதாபிமான நடவடிக்கையின் நோக்கம் இவற்றினை அகற்றி கண்ணிவெடிகள் அற்ற பிரதேசங்களை வடக்கில் உறுதிப்படுத்துவதோடு இலங்கை அரசாங்கத்தின் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கும் உதவுவதாகும்.

இந் நிகழ்ச்சித் திட்டத்தில் கண்ணிவெடியகற்றும் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கப்படவுள்ளது. கடந்த 2003இல் இருந்து நோர்வேஜிய அரசாங்கம் தொடர்ச்சியாக இரண்டு இந்திய அரசசார்பற்ற நிறுவனங்களான சர்வாத்ரா ஹெறறிசன் ஆகிய நிறுவனங்களுக்கும் மிலிந்த மொரகொடவின் மக்கள் சக்தி நிறுவனத்திற்கும் நிதியுதவி வழங்கிவந்துள்ளது.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் ஊடாக நோர்வே கண்ணிவெடியகற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து உதவுவதை உறுதி செய்துள்ளது. (ஶ்ரீ-2)

# விபத்தில் இளைஞர் பலி!

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரத்தான்குடி பிரதேசத்தில் உள்ள தாளங்குடா பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் 8 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் தாளங்குடா முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த மாரிப்போடி ஜெயதீஸன் என்ற 26 வயதான நபரே உயிரழுந்தவராவார்.

இவரது நண்பரும் குறித்த நபரும் மோட்டார் சைக்கிளில் மட்டகளப்பு நோக்கி சென்று கொண்டிருக்கும் போது தாளங்குடா சந்தியில் வைத்து போக்குவரத்து பொலிஸார் இவர்களை மறித்துள்ளனர்.

இதன்போது வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் மீது மோதுண்டபோது மோட்டார் சைக்கிளை ஓடிவந்தவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தின் போது குறித்த நபர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாகவும் குறித்த நபரின் நண்பர் மற்றும் பொலிஸார் ஒருவரும் இதன் போது படுகாயமடைந்து ஆரையம்பதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் ஆரையம்பதி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஶ்ரீ-2)

# புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அறியாமல் தடுப்பில் வாடும் அகதிகள்

அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரிய அகதிகள் பலர் நீண்ட காலமாக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருப்பதை இவர்களுக்கு அறிவிக்கப்படாமலேயே இவர்கள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விவகாரம் தற்போது வெளிவந்திருக்கிறது.

அவுஸ்திரேலியாவுக்கு அரசியல் தஞ்சம் கோரி வந்தவர்களில் பலர் இவ்வாறு நீண்டகாலமாக குடிவரவு அதிகாரிகளால் தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப் பட்டிருப்பது குறித்த தகவல்கள் வெளிவந்துள்ளன.

நிரம்பி வழியும் தடுப்பு முகாம்களில் பதற்றமும் எதிர்ப்பும் போராட்டமும் இடம்பெற்று வருவதைத் தடுக்கும் முயற்சியாகவே இந்த நடவடிக்கையை குடிவரவு அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றார்கள் என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

இது ஒரு முறைகேடான, சட்டத்துக்கு விரோதமான, அதிகார துஷ்பிரயோக செயல்பாடு என்று மனித உரிமைகள் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (ஶ்ரீ)

# அமைச்சுக்களின் 56 செயலாளர்களில் சிறுபான்மையினருக்கு 2 மாத்திரமே!

## மேல்மாகாணசபை உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியினால் 56 அமைச்சுக்களுக்கு செயலாளர்கள் நியமிக்கப்பட்ட போது இரண்டு சிறுபான்மையினர் மாத்திரமே நியமிக்கப்பட்டிருப்பதாகவும் நிர்வாகத்துறையில் உச்ச தகுதிகள் கொண்ட பெரும் எண்ணிக்கையிலான சிறு பான்மையின அதிகாரிகள் இருந்த போதிலும் ஜனாதிபதி அனைவரையும் கவனத்தில் கொள்ளவில்லை என மேல்மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஏ.ஜே.எம். முஸாமில் தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக வீ.சிவஞானசோதி, இடர்முகாமைத்துவ அமைச்சின் செயலாளராக எஸ்.எம்.மொஹமட் ஆகியோர் மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சுக்களுக்குரிய துறைகள் தொடர்பான வர்த்தமானி தயாரிக்கப்படும்போது அமைச்சின் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்ட போதும் சகல அமைச்சுக்களும் ராஜபக்ஷ சகோதரர்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் வகையில் ஜனாதிபதி செயற்பட்டுள்ளதாக முஸாமில் குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி அரச அதிகாரிகளை நியமித்தல், விலக்குதல், பதவி உயர்வு வழங்குதல் ஆகிய அதிகாரங்களை ஜனாதிபதி தன்வசம் எடுத்துக்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் புதிதாக அமைச்சுக்களுக்கு நியமிக்கப்பட்ட சகல அதிகாரிகளும் நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவின் கீழ் பணியாற்றிய அரசுக்கு சார்பான அதிகாரிகள் எனவும் முஸாமில் கூறியுள்ளார் (ஶ்ரீ)




- 1420-இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றி மன்னன் பாரிசை முற்றுகையிட்டான்.
- 1640-போர்த்துக்கல் ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றது. நான்காம் ஜொவாவோ மன்னனானான்.
- 1768-அடிமைகளை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று நோர்வேக்கருகில் மூழ்கியது.
- 1822-முதலாம் பீட்டர் பிரேசிலின் பேரரசன் ஆனான்.
- 1875-வேல்ஸ் இளவரசர் (இங்கிலாந்தின் ஏழாம் எட்வேர்ட் மன்னர்) கொழும்பு வந்தார்.
- 1918-ஐஸ்லாந்து டென்மார்க் முடியாட்சியின் கீழ் சுயாட்சி உரிமை பெற்றது.
- 1918-சேர்பிய, குரொவேசிய, சிலவேனிய இராச்சியம் (பின்னர் யூகோஸ்லாவிய இராச்சியம்) அமைக்கப்பட்டது.
- 1924-எஸ்தோனியாவில் கம்யூனிசப் புரட்சி தோல்வியில் முடிந்தது.
- 1934-சோவியத் ஒன்றியத்தில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்பீட உறுப்பினர் செர்கே கீரொவ் கட்சித் தலைமையகத்தில் வைத்து லியொனீட் நிக்கொலாயெவ் என்பவனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 1958-பிரான்சிடம் இருந்து மத்திய ஆபிரிக்கக் குடியரசு விடுதலை பெற்றது.
- 1958-சிக்காகோவில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் 92 மாணவர்கள் உட்பட 95 பேர் கொல்லப்பட்டனர்.
- 1959-பனிப்போர்: அண்டார்டிக்கா கண்டத்தில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவும் அக்கண்டத்தை அறிவியல் ஆராய்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.
- 1960-கொங்கோ ஜனாதிபதி பத்திரிசு லுமும்பா இராணுவத் தளபதி மொபுட்டுவினால் கைது செய்யப்பட்டார்.
- 1961-இந்தோனேசியாவின் மேற்கு நியூ கினியில் மேற்கு பப்புவா குடியரசு அறிவிக்கப்பட்டது.
- 1963- நாகாலாந்து இந்தியாவின் 16 ஆவது மாநிலமானது.
- 1965-இந்தியாவில் எல்லைக் காவற் படை அமைக்கப்பட்டது.
- 1971-இந்திய இராணுவம் காஷ்மீரின் ஒரு பகுதியைப் பிடித்தது.
- 1973-பப்புவா நியூகினி அவுஸ்திரேலியாவிடம் இருந்து சுயாட்சி பெற்றது.
- 1981-யூகொஸ்லாவியாவின் விமானம் ஒன்று கோர்சிக்காவில் வீழ்ந்ததில் அதில் பயணஞ் செய்த 180 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1981-எயிட்ஸ் நோய்க்கொல்லி அதிகாரபூர்வமாக கண்டறியப்பட்டது.
- 1982-முதலாவது செயற்கை இருதயம் யூட்டா பல்கலைக்கழத்தில் பார்னி கிளார்க் என்பவருக்குப் பொருத்தப்பட்டது.
- 1989- பனிப்போர் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏகபோக அதிகாரத்தை அகற்ற கிழக்கு ஜெர்மனி நாடாளுமன்றம் அதன் அரசியலமைப்பைத் திருத்தியது.
- 1989- பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொரசோன் அக்கீனோவை பதவியில் இருந்து அகற்ற எடுக்கப்பட்ட முயற்சிதோல்வியடைந்தது.
- 1991- பனிப்போர்: உக்ரேன் வாக்களார்கள் சோவியத்திடம் இருந்து உக்ரேன் முற்றாக வெளியேற வாக்களித்தனர்.
- 2006- இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது கொழும்பில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் அவர் காயமெதுவுமின்றி தப்பினார்.

### பிறப்புக்கள்

- 1935-வூடி அலன், அமெரிக்க திரைப்படம்/ திரைப்படத் தயாரிப்பாளர், நடிகர்.
- 1954-மேதா பட்கர், இந்திய சமூக ஆர்வலர்.
- 1960-உதித் நாராயண், இந்திய திரைப்படத்தின் பின்னணிப் பாடகர்.
- 1963- அர்ஜூன றணதுங்க, இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர்

### இறப்புகள்

- 1825-முதலாம் அலெக்சாண்டர், ரஷ்ய சார் மன்னன் (பி.1777)
- 1973-டேவிட் பென்-குரியன், இஸ்ரேலின் முதல் பிரதமர் (பி.1886)
- 1990-விஜயலட்சுமி பண்டிட் (பி.1990)

# உலக எயிட்ஸ் தினம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்ட மட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம்

வடமராட்சி வல்யத்திற்குட்பட்ட பருத்தித் துறை , கரவெட்டி , மருதங்கேணி கோட்டமட்டத்தில் நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டி மற்றும் வாய்ப்பாடு மனனப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**திருக்குறள் மனனப்போட்டி**

**கரவெட்டிக் கோட்டம்**

தரம் 4-செ.தர்சிகா, யோ.சாம்பவி (யா/ கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி), சி. சஜந்தினி (யா/ இமையாணன் அ.த.க. வித்தி.

தரம் 5- பா.பானுஜா, ப.கோபிகா, இ.மதுஷா (யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.

**மருதங்கேணிக் கோட்டம்**

தரம் 1-கு.ஆன்சின்சியா, யோ.ஜெனுசன், ஆ.ஆன்சலா (யா/மணற்காடு றோ.க.த.க.பா).

தரம் 2- பி.மேரிலூஜினி (யா/மணற்காடு றோ.க. த.க.பா), கோ.டிலானி (யா/அம்பன் அ.மி.த.க.பா), எ.அஜித்தா (யா/மணற்காடு றோ.க.த.க.பா).

தரம் 3- டெ.பெனதெத்தோ, பி.லுயினா செ.டனுசன், (யா/மணற்காடு றோ.க.த.க.பா).

தரம் 4 - யோ.லக்ஷின், ந.லக்ஷின் (யா/குடத்தனை அ.த.க.பா), அ.அனித்தா (யா/நாகர் கோயில் ம.வித்தி.

தரம் 5- செ.மேரி அகிசனா, ம.மயூரன், யே.மேரிடியூளினி (யா/மணற்காடு றோ.க.த.க.பா).

**வாய்ப்பாடு மனனப் போட்டி**

**பருத்தித்துறைக் கோட்டம்**

தரம் 3- சு.வக்சலா, ம.வசீகரன் (யா/ பரு. சித்தி விநாயகர் வித்தி), ஜெ.சாமினி (யா/ வட இந்து மகளிர் கல்லூரி).

தரம் 4 - ப.கஜேந்திரன் (யா/ தம்பசிட்டி. மெ.மி.த.க.பா), கோ.கிருஷாந் (யா/ தும்பளை சிவப்பிரகாச வித்தி), ர.கம்சிகா (யா/ மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தி).

தரம் 5- சி.துவாரகன், ச.சமீலா (யா/ தும்பளை சிவப்பிரகாச வித்தி), து.டெபோறா ஜோய் (யா/ வட இந்து மகளிர் கல்லூரி).

**கரவெட்டிக் கோட்டம்**

தரம் 3 - சு. அபிநயா , இ. சுஜானி, கு.அபிநயா (யா/மாணிக்கவாசகர் வித்தி),

தரம் 4- ம.கோபிகா,ம.துஷா, இ.விவேகா (யா/மாணிக்கவாசகர் வித்தி,

தரம் 5 - ந.விதுர்ஷன், ப.கோபிகா, பா. பானுஜா (யா/மாணிக்கவாசகர் வித்தி.

**மருதங்கேணிக் கோட்டம்**

தரம் 3 - ஜெ.ஜெமில்சன் (யா/மணற்காடு றோ.க.த.க.பா), ஜெ.தர்ஷிகா (யா/குடத்தனை அ.த.க.பா), கி.கிலஷ்சிகா (யா/ நாகர் கோவில் ம.வித்தி

தரம் 4- கோ.பிரியங்கன் (யா/அடம்பன் அ.மி.த.க.பா), ப.கனிஷ்ரன் (யா/குடத்தனை அ.த.க.பா) , பு.சுதர்சிகா (யா/அடம்பன் அ.மி. த.க.பா),

தரம் 5- அ.மரியதொசானா (யா/மணற்காடு றோ.க.த.க.பா), உ.தர்மினி, இ.எப்சிகா (யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க.பா). (ஸ்ரீ-19)

# நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சை வயதெல்லையை நீடிக்கக் கோரிக்கை

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காக நடத்தப்படும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கான வயதெல்லையை நீடிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள 28 என்ற வயதெல்லையை 32 வயதாக உயர்த்த வேண்டுமென இலங்கை சுதந்திர பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்மூலம் தொழில் வாய்ப்புகளை எதிர்பார்த்து நீண்ட காலமாக வீடுகளில் இருக்கும் பட்டதாரிகளுக்கும் இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமெனச் சங்கத்தின் பிரதம செயலாளர் மனுல பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாகப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ டி ஜே. செனவிரத்னவிடம் கேட்ட போது இந்த வேண்டுகோள் தொடர்பில் ஆராய்ந்து வய தெல்லையை நீடிப்பது தொடர்பாகத் தீர்மானமொன்றை எடுப்பதாகக் கூறினார். (ஸ்ரீ-2)

# 100 மாணவர்களுக்கு இந்திய புலமைப்பரிசில்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 100 இலங்கை மாணவர்களுக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இந்திய உயர்ஸ்தானிகராலயத்தால் மகாத்மாகாந்தி புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தாவினால் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ள நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் பிரதி கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டின் க.பொ.த (சா/த) பெறுபேறுகளின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா வீதம் இரண்டு வருடங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சீனாவின் கண்சூ மாகாணத்திற்கும் மத்திய மாகாணத்திற்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்து

சீனாவின் கண்சூ மாகாணத்திற்கும் இலங்கையின் மத்திய மாகாணத்திறகும் இடையிலான புரிந்துணர்வு கூட்டுஒப்பந்தம் கடந்த சனிக்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் கண்டியிலுள்ள மத்திய மாகாண ஆளுநர் செயலக மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் சீன நாட்டின் கண்சூ மாகாண செயலாளர் லூஹாஹோவும் மத்திய மாகாண ஆளுநரும் டிக்கிரி கொப்பேகடுவவும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாட்டினதும் குறித்த இரு மாகாண மக்களது நலன் மேம்பாடுகள், கல்வி, கலாசாரம், பொருளாதாரம் மற்றும் தொழிற்துறை, சுகாதாரம், அபிவிருத்தி உட்பட பல விடயங்கள் மேம்படுத்தப்படவுள்ளன.

இதன் மூலம் இரண்டு நாட்டினதும் நீண்டகால நட்புறவுகள் மேலும் வலுவடையும் என மத்திய மாகாண ஆளுநர் மற்றும் கண்சூ மாகாண செயலாளரும் கூட்டாக தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)

# கிளிநொச்சியில் குளங்கள் நிரம்பி வழிகின்றன

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் பெய்த கன மழை காரணமாக குளங்கள் நிரம்பி வழிகின்றன. வன்னேரி , புது முறிப்பு குளம் , கரியாலை நாகபடுவான் போன்ற குளங்களே நிரம்பி வழிவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

**இம்பூரல்**

**Botanical Name-oldenlandia umbellata**
**Family-Rubiaceae**
**Engl-Chaya root**
**Sinh-Saya**

இது தரையோடு தரையாக ஒட்டிப்படராமல், சிறிது தலை தூக்கி நிமிர்ந்து நன்கு அடர்த்தியாக வளரும் ஓராண்டு செடியாகும். கணுக்களில் வேர்விடுவதில்லை. சுமார் 15-20 செ.மீ வரைக்கும் வளருகின்ற பல கிளைச் செடிகள் வேரினின்றும் தோன்றி நான்கு பக்கங்களிலும் படரும்.

அதிக அகலமில்லாத நீண்ட சிறிய இலைகள் சுமார் 2 செ.மீ நீளமும், 3 மி.மீ அகலமும் உள்ளதாய் சிறிது நெருக்கமாக இருக்கின்றன. நல்ல வெண்ணிற இதழ்கள் நான்குடைய இதன் சிறிய பூக்கள் கொத்தாக பூக்கும்.

கருகியதும் சிறிய காய்கள் காய்த்து நெத்தாக மாறும். கோடை காலத்தில் காய்ந்து விடும். மழைபெய்ததும் திரும்ப வேரினின்றும் துளிர்விட்டு வளரும். வருடம் முழுவதும் பூக்கள் காணப்படும்.

**இனவிருத்தியும், பரம்பலும்:**

எல்லாவகை மண்களிலும் தானாக முளைத்து வளரும். தரிசு நிலங்களில் சர்வ சாதாரணமாகக் காணலாம். விதைகளைத் தூவியும் சிறு கன்றுகளை பிடுங்கி 30 செ.மீ இடைவெளி விட்டு நட்டு பயிரிடலாம்.

**மருத்துவப் பயன்கள்:**

♦ இம்பூரல் இலைகளை நிழலில் உலர்த்தி சூரணமாக வைத்துக் கொண்டு இந்த சூரணப் பொடியை அரிசிமாவுடன் இரண்டு தேக்கரண்டி அளவு கலந்து அடை போலச் செய்ய வேண்டும். பிறகு அதை தினசரி உணவுடன் உண்டு வந்தால் என்புருக்கி எனும் நோய் குணமாகும்.

♦ வாயால் சளியுடன் இரத்தம் வரும் நிலைமைக்கு சிறந்த ஒரு மூலிகையாகும்.



இதற்கு 25 கிராம் இலைகளை அரைத்து சாறு பிழிந்து தேனுடன் கலந்து தினமும் 3 வேளை எடுக்கலாம் அல்லது இம்பூரல் எனும் மூலிகையை வேருடன் பிடுங்கி கழுவி நன்கு நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும்.

இந்தத் தூளில் 2 கிராம் அளவு தினமும் இருவேளை தேனில் எடுக்கலாம் அல்லது 35 கிராம் இலையை 100 கிராம் தானிய மாவுடன் சேர்த்து அடை தயா ரிக்கலாம்.

♦ மார்பு எரிச்சலுக்கு இந்த மூலிகையின் இலைகளை இடித்து சாறு பிழிய வேண்டும். 20 மில்லி சாற்றுடன் அரை டம்ளர் பசும் பால் கலந்து சீனி சிறிது சேர்க்க வேண்டும். அதைக் காலையில் பல் துலக்கியவுடன் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். குடித்தால் பித்த வாய்ப்பு சார்ந்து எழக் கூடிய மார்பு எரிச்சல் அடங்கும்.

காச நோய் ஆரம்ப நிலையாயினும் நோய் தீவிரமடைந்த நிலையாயினும் இம்பூரல் மூலிகை சிறந்த பயனளிக்கும்.

♦ வேருடன் சேர்ந்த இம்பூரல் 100 கிராம், அதிமதுரம் 35 கிராம், சிற்றுரத்தை 30 கிராம் ஆகி யவற்றை இடித்து பொடிசெய்து அரித்து எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் 1 தேக்கரண்டி அளவு எடுத்து 1 டம்ளர் நீர் விட்டு காய்ச்சி 1/2 டம்ளராக சுண்டச் செய்து குடிநீராக்க வேண்டும்.

பின்பு அதில் 1 தேக்கரண்டி தேன் விட்டு 20 நாட்கள் முதல் 40 நாட்கள் வரை அருந்தி வந்தால் காசநோய் தணியும்.

♦ இம்பூரல் இலைகளையும் வேரையும் குடிநீராக்கி அந்தக் குடிநீரைக் கொண்டு நச்சுக்கடி பட்ட விரணங்களை கழுவலாம்.

♦ இருமல், ஆஸ்துமா, காசநோய் முக்கியமாக சளியுடன் கூடிய இரத்தவாந்திக்கு சிறந்த மருந்து,

**இம்பூரல் இலேகியமாகும்.**

இம்பூரல் வேர் 1500 கிராம், சாதிக்காய் 55 கிராம்,சாதிபத்திரி (இலை) 55 கிராம், வால் மிளகு 55 கிராம், இலந்தபட்டை 55 கிராம், ஏலக்காய் 55 கிராம், நிலப்பனங் கிழங்கு 200 கிராம், பனை வெல்லம் 8 கிலோ, நெய் 500 மில்லி, பசும் பால் 4 லீற்றர்.

1-7 வரையுள்ள சரக்குகளை நன்கு இடித்து அரித்து சூரணம் /பொடி செய்து, பனை வெல்லத்தை பசும் பாலில் கரைத்து , வடிகட்டி, காய்ச்சி, சூரணப் பொடியை சேர்த்து கலந்து சேகரித்து வைத்துக் கொள்ளவும். 5-10 கிராம் அளவு காலை, மாலை எடுக்கவும்.

♦ வேருடன் கூடிய இம்பூரல் மூலிகையை நிழலில் உலர்த்தி பொடித்து, சரித்த சூரணப் பொடி 1 பங்கு, வெள்ளை மிளகு 1/4 பங்கு எடுத்து இடித்து அரித்து மேற்படி பொடியுடன் கலந்து வெந்நீரில் அரைத்து உருண்டையாக்கி வைத்துக் கொள்ளவும்.

நாட்பட்ட இருமலுக்கு வாயில்போட்டு உமிழ்ந்து வர இருமல், ஆஸ்துமா நன்கு குண மடையும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௨௬ ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

8ஆம் எண் வரிசையில் மூன்றாவதாக வரும் 26ஆம் திகதி பிறந்தவர்கள் பெரும்பாலும் விதியை அனுபவிக்கப் பிறந்தவர்களாகவே இருப்பதைக் காணலாம். 26ஆம் திகதி பிறந்தவர்கள் இலாபம்-நஷ்டம் இரண்டையும் சமமாகவே பெறும் தன்மையுடையவர்கள். மிகப் பெரிய செல்வந்தர்களும், பரம ஏழைகளும், இந்தத் திகதியில் பிறந்திருக்கிறார்கள். இவர்களின் வாழ்வில் ஏற்றமும் இறக்கவும் மாறி மாறியும் செயற்படும். இவர்களின் தொழில் எண்கள் 1, 7; தொழில் உதவி எண்களும் ஒரே எண்களாக (1 மற்றும் 7) அமைந்துள்ளதால்தான் நஷ்டம் என்றால் தொடர்ந்து நஷ்டமாகவும்; நன்மை என்றால் தொடர்ந்து நன்மையாகவும் நடக்கிறது.

இவர்கள் பெரும்பாலும் மனசாட்சியுடன் செய்யும் பணிகளிலும்; பணப் புழக்கம், பெண்கள் தொடர்பான துறைகளிலும் இருப்பதைக் காணலாம். இவர்களின் தொழில் எண்களும் தொழில் உதவி எண்களும் ஆதிக்கம் பெற்றிருந்தால், நடுத்தரமான நிலையையே கொடுக்கும். பிறந்த திகதி எண் ஆதிக்கம் நன்றாக இருந்தால் நல்ல பதவியும் முன்னேற்றமும் தொடர்ந்து கிடைக்கும். பிறந்த திகதி எண்களில் 2 அல்லது 6ஆம் எண்களில் ஏதேனும் ஒன்றின் ஆதிக்கம் இருந்தாலும் தடையில்லா நன்மையைப் பெறுவார்கள். பிறந்த திகதி எண்களின் ஆதிக்கக் குறை உள்ளவர்களுக்குதான் பல பிரச்சினைகளில் தலையிட்டு கஷ்டங்களை அனுபவிக்கும் நிலை உண்டாகும். இவர்கள் பெரும்பாலும் ஆண்கள் என்றால் பெண்கள் தொடர்பான சர்ச்சையில் ஈடுபட்டு, தங்கள் வாழ்க்கையைத் தாங்களே கெடுத்துக்கொள்ளும் நிலை உண்டாகும். பெண்கள் என்றால் கூடாத பழக்கங்களால் தங்களின் நிலை மாறப் பெற்று தொழிலில் சிக்கலில் தவிப்பார்கள். பிறந்த திகதி எண்களும் தொழில் எண்களும் சிறந்த ஆதிக்கம் பெற்றிருந்தால் மட்டுமே இவர்களின் வாழ்வில் வசந்தம் வீசிக்கொண்டிருக்கும். இவர்கள் வெள்ளிக்கிழமைதோறும் கங்கா தேவி வழிபாடு அல்லது நீர் நிலைக்குச் சென்று, நீரில் தீபம் ஏற்றி வழிபாடு செய்தால் நன்மைகள் பெறலாம்.

பெரும்பாலான சுயதொழில் புரிவோர்- இருந்தால் கோபுரத்தின் உச்சியில் இருப்பார்கள்; இல்லையெனில் நேர்மாறாக படு பாதாளத்தில் இருப்பார்கள். இவர்களின் தொழில் எண்களும் தொழில் உதவி எண்களும் (1, 7) நல்ல பலன்களைக் கொடுத்த போதிலும், பிறந்த திகதி எண்களான 2, 6இன் தன்மையைப் பொறுத்தே நன்மையும் தீமையும் கிடைக்கப் பெறுவார்கள். பிறந்த திகதி எண்களின் ஆதிக்கம் மட்டும் இருந்தால்கூட போதும்; இவர்கள் தப்பித்து விடுவார்கள். விதி, மனைவி வழியில் தான் நன்மையே தீமையே என்ற முடிவுக்கு விட்டு விடும். மனைவி எண் சரியாக அமையப் பெற்றால் தான் (8,17,26) வாழ்க்கையில் வெற்றி என்பது இவர்களுக்கு தொடர்ந்து கிடைக்கும். பெண் தொழிலதிபர்களாக இருந்தால் சரியான கணவன் எண்கள் (8,17,26:9, 18, 27) இருந்தால்தான் நன்மையுண்டாகும். எப்படியும் 8ஆம் எண் எவ்வளவு தீமையைச் செய்தாலும் கடைசியாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாபெரும் நன்மையையும் செய்து வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரியும்படி செய்து விடும். இதனால்தான் 8ஆம் எண் வரிசையில் பிறந்தவர்கள் தொடர்ந்து தீமையையோ அல்லது நன்மையையோ பெறும் நிலை இருக்கிறது. இவர்கள் வாரம்தோறும் பார்வையற்றவர்களுக்கு உதவிகள் செய்து வந்தால் நன்மைகள் பல பெறலாம்.

இவர்கள் பெரும்பாலும் மோட்டார் வாகனத்துறை, பழுது பார்க்கும் தொழில், கனரக வேலை செய்பவர்களாக இருப்பதைக் காணலாம். வாழ்க்கையில் நாம் இப்படியே தான் காலத்தை ஓட்ட வேண்டும் என்று நம்பி ''எல்லாம் விதி' என்று அடிக்கடி கூறிக் கொள்பவர்கள். இவர்களுக்கு தொழில் எண்களோ தொழில் உதவி எண்களோ எந்தவித நன்மையையும் செய்வதில்லை. அதே நேரம் தீமையும் செய்வதில்லை. பிறந்த திகதி எண்களான 2, 6இன் ஆதிக்கத்தைப் பொறுத்து சிறிய வேலை அல்லது பெரிய வேலை என்று நிலை இருக்கும். மனைவியால் அதிகம் பாதிக்கப்படுபவர்களும் இவர்களே. மனதால் செயல்படும் குணம் அதிகம் இருப்பதால், அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டு பல தவறுகள் செய்து இன்னல்களை அனுபவிப்பார்கள். பெண் தொழிலாளர்களாக இருந்தால் பாலியல் தொடர்பான பிரச்சினையில் சிக்கி, தானும் கெட்டு மற்றவர்களையும் கெடுக்கும் நிலை உண்டாகும். காதல் திருமணம், திருமணமாகியும் வெளித் தொடர்புகள் என்று வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் வாழ்வில் வளம் பெற-மனம் நிலைபெற சனிக்கிழமை தோறும் சண்டிகேஸ்வரரை வழிபாடு செய்து வந்தால் நன்மைகள் பெருகும்.

இவர்கள் மிகவும் கடின உழைப்பினால் முன்னேற்றம் காண்பவர்களாக இருப்பார்கள். இவர்களுக்கு தொழில் எண், தொழில் உதவி எண், பிறந்த திகதி எண்கள் மாறி மாறிச் செயல்படுவதால், உழைத்தால் உயர்வு தானே கிடைக்கும். உயர்வால்பேரும் புகழும் கிடைக்கும். 44 அல்லது 53ஆம் வயதுகளில் சிலர் கஷ்டப்பட்டு பெற்றதை இழக்கும் படியான சூழ்நிலைகள் இருக்கும். கவனமாகச் செயல்பட்டால்தான் தொடர் நன்மைகளைப் பெறமுடியும். ஆண் கலைஞர்கள் பெண்களால் தான் இருக்குமிடம் தெரியாமல் போகும் நிலை ஏற்படும். 8ஆம் எண்ணின் தனித் தன்மையையும் குணத்தையும் செயல்பாட்டையும் தெரிந்து செயல்பட்டால் எங்கும் எதிலும் வெற்றி பெறலாம். இவர்கள் சனிக்கிழமை தோறும் சனீஸ்வர பகவானுக்கு எள் உருண்டை வைத்து வழிபட்டால் மேலும் நன்மைகள் பெறலாம்.

பிறந்த திகதி 26, விதி எண் 1ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் அதிக பட்சமாக 17 முதல் 26 வருடங்கள் வரை யோக பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 26, விதி எண் 2ஆக உள்ளவர்களுக்கு எண் ஆதிக்கத்தைப் பொறுத்து 17 ஆண்டுகளும் 8 ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் 17 ஆண்டுகளும் யோக பலனைக் கொடுக்கும். பிறந்த திகதி 26, விதி எண் 3ஆக உள்ளவர்களுக்கு 26 ஆண்டுகள் யோக பலன்களைக் கொடுக்கும். பிறந்த திகதி 26, விதி எண் 4ஆக உள்ளவர்களுக்கு மிக அதிகபட்சமாக 35 ஆண்டுகள் யோக பலன்களைக் கொடுக்கும். பிறந்த திகதி 26, விதி எண் 5ஆக உள்ளவர்களுக்கு மிக அதிக பட்சமாக 27 ஆண்டுகள் யோக பலன் கிடைக்கும். பிறந்த திகதி 26, விதி எண் 6ஆக உள்ளவர்களுக்கு அதிகபட்சமாக 33 ஆண்டுகளும் குறைந்தபட்சமாக 15 ஆண்டுகளும் யோக பலனைக் கொடுக்கும். பிறந்த திகதி 26, விதி எண் 7ஆக உள்ளவர்களுக்கு 25 ஆண்டுகள் யோக பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி 26, விதி எண் 8ஆக உள்ளவர்கள் அவர்களின் எண்ணத்தைப் பொறுத்து 8 ஆண்டுகள் அல்லது 14 ஆண்டுகள் என்று மாறி மாறி யோக பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி

**எஸ்.என்.ஹரிஜி**

26, விதி எண் 9ஆக உள்ளவர்களுக்கு தொடர்ந்து யோக பலன்கள் செய்து கொண்டே இருக்கும். தத்தம் செயல்களைப் பொறுத்து அளவுகள் மாறுபடும். மிக அதிகமாக 36 ஆண்டுகள் வரை யோக பலன் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் என் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும்.

(தொடரும்)





பருத்தித்துறை ஞானசம் பந்தர் கலைமன்ற முன்பள்ளி விளையாட்டுப்போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பருத்தித்துறை பிரதேச செயலக உதவிச் செயலர் திருமதி உசா சுபலிங்கம் முன்பள்ளி கொடி யேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

## பாதுகாப்புச் செயலரின் கருத்துக்கு ஜே.வி.பி. கட்சி கடும் கண்டனம்

பொறுப்புணர்ச்சி அற்ற வகையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளதாக ஜே.வி.பி. கட்சியின் பிரசார செயலாளர் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச்செயலாளரின் இந்த பொறுப்புணர்ச்சி அற்ற கருத்தை வன்மையாகக் கண்டிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் வடக்கில் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதனால் அவசர காலச் சட்டத்தை நீக்க முடியவில்லை என பாதுகாப்புச் செயலாளர் வெளியிட்டுள்ள கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புச் செயலரின் கருத்துக்கு எதிர்ப்பு வெளியிடும் வகையில் விஜித ஹேரத் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். போர் நிறைவடைந்து 18 மாதங்கள் கடந்துள்ளதாகவும் நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு இந்த காலப் பகுதி போதுமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சிவில் நிர்வாகத்தின் சுதந்திர உரிமைகளை அனுபவிப்பதற்கு இன்னமும் வடக்கு மக்களுக்கு வாய்ப்புக்கிட்டவில்லை என அவர் தெரிவித்துள்ளார். ஸ்ரீ

## முல்லைத்தீவு வனப்பகுதியில் வனவிலங்கு சரணாலயம்

முல்லைதீவின் வனப் பகுதியில் ஒரு இலட்சம் ஏக்கர் காணியை சரணாலயமாக ஒதுக்குவதற்கு வன விலங்கு பாதுகாப்பு அமைச்சு ஏற்பாடுகளை செய்து வருகிறது.

வடக்கிலும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் யானை- மனித மோதல் நிலையை தவிர்ப்பதற்காகவே வடக்கில் இந்த சரணாலயத்தை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ். என்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

இதன் படி பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டு காட்டு யானைகளை இந்த சரணாலயத்திற்குக் கொண்டு சென்று விட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டு செம்புலகமுவ ஜதா என்ற யானையின் மரணம் தொடர்பில் தற்போது பலரின் கவனம் திரும்பியுள்ளது. எனவே யானைகளைக் கொண்டு செல்வதற்கு புதிய வாகனங்களை கொள்வனவு செய்ய தமது அமைச்சு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விதிப்பு மாற்றமும் பொருளாதார தாக்கங்களும்

## ஓர் ஆய்வு (02)

1.5 வருமான வரி விலக்களிப்புக்கள்

(1) புதிய முதலீடுகளுக்கான வரி விடுதலை.

புதிய முயற்சிகளில் 5000 ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்குக் குறையாத முதலீடுகளை மேற்கொள்ளும் கம்பனிகளுக்கு 5 ஆண்டு வரி விடுதலை வழங்கப்படும்.

(2) துறைவாரியான விலக்களிப்புக்கள்.

பின்வரும் துறைகளுக்கு 01.04.2011 இலிருந்து அவற்றின் வருமானங்கள் மீது 01.04.2011 இலிருந்து விலக்களிக்கப்படும்:-

- ✡ மீன்பிடித்தல்
- ✡ ஆரம்ப விதை மற்றும் பயிர் செய்கை விவசாய நடவடிக்கைகள்.

(3) நிறுவன ரீதியான விலக்களிப்புக்கள்

01.04.2011 இலிருந்து அனைத்து மூலங்களிலிருந்தும் 10 ஆண்டுகளுக்கு வரையறுத்த ஸ்ரீலங்கா விமான தேவை மற்றும் வரையறுத்த மிகின் லங்கா விமான சேவைக்கும் 5 ஆண்டுகளுக்கு இலங்கை மின்சாரசபை, தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை துறைமுக அதிகாரசபை வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் இந்த நிறுவனங்கள் தமது வருடாந்த மொத்த இலாபங்களில் 25 சதவீதத்தை அரசாங்கத்திற்கு பங்கிலாபக் கொடுப்பனவாக வழங்கவேண்டும்.

**2. பெறுமதி சேர்வரி**

2.1 வரி வீதம்

தற்போது நடைமுறையிலுள்ள ஆடம்பர வரி வீதமான 20% ,12% வீதமாகக் குறைக்கப்படும்.அதன்படி பூச்சிய வீதம் தவிர்ந்த பெறுமதி சேர்வரி தனி ஒரு வீதமாக 12% இல் தொடர்ந்திருக்கும்.

2.2 புதிய விலக்களிப்புக்கள்

1. தொலைத்தொடர்புச் சேவைகள்.
2. உள்நாட்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட கணனி மென்பொருள்.
3. மீள்காப்புறுதி சேவைகளை வழங்குவதில் பெற்றுக்கொள்ளப்படும் தரகு.
4. பொழுதுபோக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் 28 ஆசனங்களுக்கு குறையாத மோட்டார் கோச், லொறிகள், உழவு இயந்திரங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் ஆகியவற்றிற்கான குத்தகை.
5. தோற்பொருள், பாதணிகள் மற்றும் பைகள் தயாரிப்புக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதிகள்.
6. உயர் தொழில்நுட்ப மருத்துவ மற்றும் ஆய்வுகூட உபகரணங்களின் இறக்குமதிகள்.
7. தானியக் கலவை மற்றும் வெதுப்பக உற்பத்திகளைத் தயாரிப்பதற்கான இயந்திரங்களின் இறக்குமதிகள்.
8. நாகரிகமான ஆபரணங்கள்

ஆகியவற்றின் வழங்கல்கள் பெறுமதி சேர்வரியிலிருந்து.

2.3 உள்ளீட்டு வரிக்கான வரையறை

தற்போதுள்ள வெளியீட்டு வரியில் 85 சதவீதத்தை மட்டுமே உள்ளிட்டு வரியாக அனுமதிக்கப்படும் வரையறைகள் 01.01.2011 இலிருந்து 100% ஆக அதிகரிக்கப்படும்.

இதன்படி 31.12.2010 இல் உள்ளவாறு உள் வாங்கப்படாத அல்லது அனுமதிக்கப்படாதிருந்த உள்ளீட்டு வரி வரவானது பெறுமதி சேர்வரிச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய வருமான வரி நோக்கங்களுக்கு பின்வருமாறு கழிவாக அனுமதிக்கப்படும்.

1. அத்தகைய உள்ளீட்டு வரி வருமானத் தன்மை தொடர்பிலானதாயின் வரி மதிப்பீட்டாண்டு 2010/2011 இலிருந்து 4வரி மதிப்பீட்டாளர்களுக்கு 4 சமமான தவணைக் கட்டணங்கள் மூலம் வியாபாரத்தின் இலாபங்களுக்கு எதிரீடு செய்யப்படும்.
2. அத்தகைய உள்ளீட்டு வரி மூலதனத் தன்மை தொடர்பிலானதாயின் உள்வாங்கப்படாத உள்ளீட்டு வரி, மூலதன சொத்தாகக் கருதப்பட்டு பெறுமானத் தேய்வுக்கான கழிவு அனுமதிக்கப்படும்.

2.4 விருப்பத்திற்குரிய பெறுமதி சேர்வரி

விருப்பத்திற்குரிய பெறுமதி சேர்வரி நிலையில் நீடித்திருக்கும் காலப் பகுதியைப் பொறுத்து அதன் வரி வீதங்கள் பின்வருமாறு அமையும்.

| காலப்பகுதி | வரிவீதம் |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 3ஆவது ஆண்டின் இறுதி வரை | 2% |
| 4ஆவது ஆண்டின் ஆரம்பத்திலிருந்து 6ஆவது ஆண்டின் இறுதிவரை | 4% |
| 7ஆவது ஆண்டின் ஆரம்பத்திலிருந்து 9ஆவது ஆண்டின் இறுதி வரை | 8% |
| 10ஆவது ஆண்டின் ஆரம்பத்திலிருந்து 12ஆவது ஆண்டின் இறுதி வரை | 12% |

மேலேயுள்ள வரி வீதங்களைப் பிரயோகிப்பதற்குரிய மேல் எல்லை கிடையாது. எவ்வாறாயினும் மேலே உள்ள எந்தக் கட்டத்திலும் சாதாரண பெறுமதி சேர்வரி முறைக்குள் பதிவு செய்வதற்கு விருப்பத் தேர்வு வழங்கப்பட்டுள்ளது.

2.5 நிதிச் சேவைகள் மீதான பெறுதி சேர்வரி.

1. தற்போதைய வரி வீதமான 20%, 12% ஆகக் குறைக்கப்படும்.
2. வரி நோக்கங்களுக்கான கூடிய பெறுமதிக் கணிப்பு, செலுத்த வேண்டிய நிதிச் சேவை மீதான பெறுமதி சேர் வரியைக் கழிக்பின் மேற்கொள்ளப்படும்.
3. நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரிக் கணிப்பீட்டை ஒரே சீரான முறையில் மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு ஆணையாளர் அதிபதியால் அதற்கான உதவிக் குறிப்புகள் வழங்கப்படும்.
4. வரி விபரத் திரட்டுக்கள் வருடாந்தம் சமர்ப்பிக்கும் அதேவேளை வரிக் கொடுப்பனவு மாதாந்த அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

2.6 நிர்வாக ஏற்பாடுகள்

1. மீளளிப்புக்கள்

✡ பெறுமதி சேர் வரி மீளளிப்புக்கான காசோலைகள், நேரடியாக வரி செலுத்துவோரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படும்.

✡ 15 நாட்கள் மீளளிப்பு முறை நீக்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்ட (Suspension) முறை அறிமுகம் செய்யப்படும்.

✡ உள்ளீட்டு வரியை குறுக்குச் சோதனை



செய்வதற்குரிய வழிமுறையொன்று அறிமுகம் செய்யப்படும்.

✡ நியாயமானதொரு காலப்பகுதி வரை ஆர்வம் காட்டாத மீளளிப்புக்கள் ஒதுக்கப்படுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

2. முற்பண பெறுமதி சேர்வரிக் கழிப்பனவுகள் நீக்கப்படும்.

3. பூச்சிய வீதம் தவிர்ந்த ஏனைய ஆட்கள் அனைவரும் காலாண்டு அடிப்படையில் விபரத்த திரட்டுக்களை சமர்ப்பிக்கும் வகையில் சட்ட ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படும்.

4. மூன்று நட்சத்திரங்களுக்கு மேற் பட்ட ஹோட்டல்களின் சேவைகள் மற்றும் விருப்பத்திற்குரிய பெறுமதி சேர்வரிக்கு பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆள் ஆகியோருக் கான விலக்களிப்புக்கள் நீக்கப்படும்.

**பாலசுந்தரம் சிவாஜி**
B.A.Hons (Econ),
M.A.(Econ),MBA (Finance),
பிரதி ஆணையாளர்,
உள்நாட்டு இறைவரித்திணைக்களம்

3. பொருளாதார சேவைக் கட்டணம்

3.1 விலக்களிப்புக்கள்

இச்சட்டத்தின்படி வரைவிலக்கணப் படுத்தப்பட்ட விநியோகஸ்தர்கள், லொத்தர்களின் முகவர்கள், அலகுப் பொறுப்பு மற்றும் பரஸ்பர நிதியம், விமான மற்றும் கப்பல் சேவைகள் ஆகியவற்றின் விற்பனை புரள்வு பொருளாதார சேவைக் கட்டணத்தி லிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. (தொடரும்)

# மீள்குடியேற்றத்தின் போது அடிப்படை சனத்தொகை பரம்பலில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

சனத் தொகைப் பரம்பலில் மாற்றம் ஏற்படும் வகையில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படமாட்டாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதேசங்களின் அடிப்படை சனத்தொகைப் பரம்பலில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவு-செலவு திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பதனை தவிர்த்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கை வரவேற்கத்தக்கதெனவும் அரசாங்கத்தின் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கி வரும் ஆதரவு பாராட்டுக்குரியதெனவும் அவர், தெரிவித்துள்ளார்.

வடக்கு மீள் குடியேற்ற நடவடிக்கைகள் சுலபமானதல்ல என்றும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு மட்டும் அரசாங்கம் 700 மில்லியன் ரூபாவினை



செலவிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்களை மீள் குடியேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் எந்தக் காரணத்திற்காகவும் மீள் குடியேற்றத்தின் போது அடிப்படை சனத்தொகைப் பரம்பலில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டா தெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பொன்சேகாவை ஊடகவியலாளர்களிடம் பேச அனுமதித்த சிறை அதிகாரிகளிடம் விசாரணை

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா ஊடகவியலாளர்களிடம் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கிய சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் வழக்கு விசாரணைகள் பூர்த்தியானதன் பின்னர் சரத் பொன்சேகாவை சிறைச்சாலை அழைத்துச் செல்வதில் கால தாமதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நேரத்தைப் பயன்படுத்தி சரத் பொன்சேகா ஊடகவியலாளர்களிடம் கருத்துக்களை வெளியிட்டிருந்ததோடு அரசாங்கத்தை கடுமையாக விமர்சனம் செய்யும் வகையில் அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

வரவு -செலவுத் திட்டம், சம்பளம் உயர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவர் விமர்சனம் செய்திருந்தார்.

உரிய நேரத்தில் சிறைச்சாலை வாகன சாரதி சரத் பொன்சேகாவை அழைத்துச் செல்லவில்லை எனவும் இது தொடர்பில் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)




மாகாண மட்ட நாடகப் போட்டியில் ஆரம்பப் பிரிவு மற்றும் மேற்பிரிவுகளில் முதலாம் இடத்தைப் பெற்ற யா/ உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளையும் பாடசாலை அதிபரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கும் பயங்கர ஆட்கொல்லி நோய் எயிட்ஸ்

## இன்று உலக எயிட்ஸ் தினமாகும்




20ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து உலகின பயங்கர ஆட்கொல்லி நோயாக எய்ட்ஸ் இனங் காணப்பட்டுள்ளது. இநத கொடிய நோயால் உயிரிழப்பவர் களின் எண ணிக்கை இன்றுவரை நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே செல்கிறது.

அதேவேளை, அனைத்து நாடுகளும் இந்நோயின் பாதிப்பிலிருந்து விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்தபோதிலும்,இந்த நோயை பூரண மாகக் கட்டுப்படுத்த இன்று வரை எந்த வித கண்டுபிடிப்புக்களும் மேற்கொள் ளப்படவில்லை.

தென்னாப்பிரிக்க நாடு உலகிலேயே அதிக அளவில் எச்.ஐ.வி நோயாளர் களைகொண்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து நைஜீரியாவும் இந்தியாவும் உள்ளன.

எயிட்ஸ் கொடுமையின் முன்னரங்க நிலையமாக ஆசியா விளங்குகிறது என்ற ஐ.நா.வின் அறிவிப்பும் உலகில் எயிட்ஸினால் பெருமளவுக்கு பாதிக கப்பட்டுள்ள இரண்டாவது நாடாக இந தியா (தமிழகத்தில் 1.6 இலட்சம் எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப பட்டுள்ளனர்) உள்ளது என்ற உண மையும் இலங்கை யர்களாகிய நாம் செய்தியாக நோக்கி விட்டு அலட்சியம் செய்ய முடியாது. எயிட்ஸ் பரவும் பேராபத்தில் இருந்து தப்பிப்பிழைத் ததாக இன்று உலகில் எந்த வொரு நாடுமேயில்லை.

இன்றுவரை எயிட்ஸ் இரண்டரைக் கோடிக்கும் அதிகமானவர்களைப் பலி யெடுத்து விட்டது. எயிட்ஸின் தொற்றுக்கு இலக்கான 4 கோடிக்கும் அதிக மானவர்கள் இன்று உலகில் இருக் கிறார்கள். தினமும் புதிதாக உலகில் 6 ஆயிரம் பேரை எயிட்ஸ் தொற்றிக் கொண்டு வருகிறது.

இலங்கையில ஒரு வெளிநாட்டவர் முதல் எயிட்ஸ் நோயாளியாக 1986 இல் பதிவானார். எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட முதலாவது இலங்கையர் 1987 இல் இனங்காணப்பட்டார். நோய் இனங்காணப்பட்ட ஆரம்பகாலத்தில் எச்.ஐ.வீ. தொற்றுடையோராக இனங காணப்பட்ட பெரும்பாலானோர் வெளி நாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந் தனர். எனினும் தற்போதய எச்.ஐ.வீ தொற்றுடையோருள் பெரும்பாலானோர் இலங்கையிலேயே தொற்றுகைக்கு ஆளாகினர். தொற்றுள்ளவர்கள் குருதிச் சோதனை மூலம் உறுதிப்படுத் தப்பட்டோர் நாட்டின் சகல பிரதேசங்களி லும் பதிவாகியுள்ளனர்.

இலங்கையில் 1285 எச்.ஐ.வி.தொற் றுடையவர்களும் 332 எயிட்ஸ் நோயா ளர்களும் 216 எச்.ஐ.வி. மரணங்களும் 31 எச்.ஐ.வி.தொற்றுடைய சிறுவர்களும் இனம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் 42 எயிட்ஸ் நோயாளிகள் இனம் காணப்பட்ட அதே வேளை 23 இறப்புக்களும் நிகழ்ந் துள்ளன.

இலங்கையில் எச்.ஐ.வி.தொற்று இது ஏற்படும் வீதமானது.

- தாயிடமிருந்து குழந்தைக்கு.
- இரத்தம் (குருதி) பாய்ச்சல் மூலம்
- ஒத்தபாலர், இருபாலர் பாலுறவுகள்
- ஆண் பெண் பாலுறவுகள்.

எயிட்ஸை உண்டாக்கும் எச்.ஐ.வீ வைரஸ மனித உடலின் நிர்ப்பீடனத் தொகுதியை தாக்குகின்றது. நிர்ப் பீடனத்தொகுதியில் உள்ள ரீ-ஹெல்பர் கலங்களையே (T-helper Cell) இது முக் கியமாகத் தாக்குவதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். எச். ஐ. வி வைரஸ் தொற்றியிருக்கும் கலத்தில் பெருகி வருகின்றன. பின்னர் அக்கலத்தை அழித்து வெளியேறுகிறது. வெளியேறிய வைரசுகள் மேலும் பல கலங்களைத் தாக்கி அழித்துப் பெருகுகின்றன.

நோயாளியின் நிர்ப்பீடனத்தை பாதித்த பின் நோய் அறிகுறிகள் தோன்றுகின்றன. எச்.ஐ.வியுடன் பல ஆண்டுகள் வாழ முடியும்.ஆனால், அவரது உடல் நோய் எதிர்ப் புச் சக்தியை இழக்கும் போதுதான் எயிட்ஸ் நோயாளியாகிறார்.

பாதுகாப்பற்ற முறையில் உடலுறவில் ஈடுபடும் போது நோய்த் தொற்றுள்ள ஒருவ ரிடமிருந்து நோய் இல்லாத ஒருவருக்கு தொற்றிக் கொள்ளும் நோய் களே பாலியல் தொற்று நோய்கள எனப படுகின்றன (sexually transmitted diseases) அதாவது பாலியல் உறவினால் தொற்றக்கூடிய நோய் கள் பாலியல் தொற்று நோய்கள் எனப்படுகின் றன.

### பாலியல் தொற்று நோய்கள் கடத்தப்படக்கூடிய முறைகள்

- தொற்று அடைந்த ஒருவருடன் பாது காப்பு அற்ற முறையில் உறவில் ஈடுபடுதல்.
- தொற்று அடைந்த ஒருவரின் குரு தியை பாய்ச்சும் போது.
- தொற்றுள்ள ஒருவருக்கு பயன்படுத் திய ஊசியை கிருமியழிக்காது மற்றவர்கள் பாவித்தல்.
- பச்சை குத்துதல்.
- அக்குபங்சர். முறையில் ஊசியை கிரு மியழிக்காது பயன்படுத்துதல்.
- தாய்ப்பாலின் ஊடாக.
- கருப்பையில் இருக்கும் குழந்தைக்கு இரத்தம் மூலமாக.

### எச்.ஐ.வி தொற்றத்தக்க ஆபத்தைப் பெருமளவிற் கொண்டுள்ளோர் யார்?

1.வர்த்தக ரீதியில் பாலியல் சார்ந்த தொழில்களில் ஈடுபடும் ஆண்களும் பெண்களும்.

2.ஒன்றுக்கு மேற்பட்டோருடன் பாலியல் தொடர்புகளை வைத்திருப்போர்.

3.தன்னின உடலுறவில் ஈடுபடுவோர்.

4.பாலுறுப்புக்களில் புண்கள் தழும புகள் காயங்கள் உடையோர்.

5பாலியல் தொடர்புகள் மூலம் கடத்தப்படும் ஏனைய நோய்களுக்கு ஆளாகியுள்ளோர்.

பெருமளவு பாலியல் ஆபத்தை எதிர் கொள்கின்றனர். நாளத்தினூடாகப் பகிர்ந்து பரிமாறியவாறு போதைப் பொருட் களை ஏற்றிக்கொள்வோருக்கும் எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ள தாய்க்குப் பிறக்கும் குழந் தைகளுக்கும் தொற்று ஏற்பட சந் தர்ப்பம் பெருமளவுக்குக் காணப்படுகின் றது.

எச்.ஐ.வி தொற்றியோருடன் சாதாரண மாக சமூக பழக்கவழக்கங்களில் ஈடுபடு வதனூடாகவோ, கைகுலுக்குதல், தொடு தல், கட்டியணைத்தல், விளையாடுதல், புகையிரதம் மற்றும் பஸ் வண்டிகளில் பய ணம் செய்தல், வியர்வை, கண்ணீர், சிறுநீர மற்றும் முத்தமிடல்,பொதுக் கழிப்பறைகள் மற்றும் படுக்கை, அவர்கள் பயன்படுத்திய உணவுப் பாத்திரங்கள் மூலமாகவோ, நீச்சல் குளம் மற்றும் இருமல், தும்மல், கொசுக் கடி மூலமாகவோ பர வாது. பொது இடங்களில் சவரம் செய்து கொள்ளும் ஆண்கள் புதிய சவர அலகு களை பயன்படுத்துவதை உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

25 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மத்தி யிலே எயிட்ஸ் அதிகமாக பரவுகிறது. அதற்கு காரணம் பாதுகாப்பான உடல் உறவை மறந்து விடுகிறார்கள். எப்ப டிபட்டவராக இருந்தாலும், எங்கு வாழ கிறவராக இருந்தாலும் எச்.ஐ.வி தொற்று பற்றிய விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் யுனிசெவ் கூட்டாக வெளி



யிட்டுள்ள கையேட்டில் தெரிவித்துள் ளது.

### எயிட்ஸ் அறிகுறிகள்

எச்.ஐ.வி ஆரம்பநிலையில் அறிகுறி கள் தெரிவதில்லை. சிலரிடம் இது காய்ச் சல் மூலம் வெளிப்படுகிறது. அது வும் இந்த வைரஸ் மூன்று முதல் ஆறு வாரங்களுக்குப் பிறகே தெரிகிறது. இந்தத் தீவிர எச். ஐ.வி பாதிப்பினால் ஏற்படும் உடல் நலக் குறைவு, காய்ச்சல், தலைவலி, உடல் சோர்வு, குமட்டல், வியர்வை (குறிப்பாக இரவு நேரங்களில்) நடுக்கம், வயிற்றுப் போக்கு, நெறி கட் டுதல் (அக்குள், கழுத்து) போன்ற வற்றினைத் தோற்றுவிக்கின்றது. இந்த அறிகுறிகள் கூட எச்.ஐ.வி தொற்றிய ஒரு சில நாட்களில் தெரிவதில்லை. எனவே ஆரம்ப நிலையில் எச்.ஐ.வி தொற் றைக் கண்டுபிடிப்பது கடினமாகும்.

உடலில் உள்ள நோய் எதிர்ப்பு கலங்க ளான வெண் குருதித்துணிக்கை அனைத் தும் ஒன்று' திரண்டு போராடத் தொடங்கும் போது தான் எச்.ஐ.வி யின் வேகம் சற்று குறைகிறது. எச்.ஐ.வி தொற்றின் தீவிரமான அறிகுறிகள் தெரிய பல வருடங்கள் ஆகின்றன. பெரியவர் களுக்கு எச்.ஐ.வி தொற்றிய பின்னர் அது வெளித் தெரிவதற்கு 10 வரு டங்களுக்கும் மேல் ஆகிறது. எச்.ஐ.வி தொற்றோடு பிறக்கும் குழந்தைகளுக்கு அது தெரிய இரண்டு வருடங்கள் ஆகின் றன. இவ்வாறு அறிகுறிகள் தெரியாத நிலை மனிதருக்கு மனிதர் மாறுபடும்.

### எச்.ஐ.வி இரத்தப் பரிசோதனை

முதலாவதாக நடத்தப்படும் இரத்தச் சோதனை. எலைசா சோதனையாகும் (ELISA TEST). இனம்காணல் பரி சோதனை (screening test) எனப்படுகிறது. எலைசா சோதனையானது எச்.ஐ.வி தொற்று அல்லாத பிற காரணங்கள் தொடர்பாகவும் நேர் வகை பெறுபேற்றைத் தர இடமுண்டு.

வெஸ்டர்ன் புலொட் (Western blot test) சோதனை- இது உறுதிப்படுத்தும் சோதனை யாகும் (Conformation test). எலைசா சோதனையில் நேர் வகையை காட்டும் ஒவ்வொரு இரத்த மாதிரியும் வெஸ்டர்ன் புலொட் சோதனைக்கு உட் படுத்தப்படும். இரத்த வகையில் எச்.ஐ.வி பிறபொருளெதிரி காணப்பட்டால் மாத் திரமே இச் சோதனையின் போது பெறு பேறு காட்டப்படும்.

**வைத்திய கலாநிதி கு.கணேசலிங்கம்,**
**பாலியல் தொற்றுநோய்கள் கிளினிக்,**
**போதனா வைத்தியசாலை.**

எலைசா சோதனை, வெஸ்டர்ன் புலொட் சோதனை ஆகிய இரண்டு சோத னையிலும் (+) வகை பெறுபேறு காணப்பட்டால் HIV பிறபொருளெதிரி உணடு என்பது அல்லது எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ளது என்பது உறுதியாகும்.

யார் எச்.ஐ.வி குருதிப் பரிசோதனை யைச் செய்து கொள்ள வேண்டும் என்ற கேள்வியும் எழுகின்றது. பாலியல் நடத்தை கள் தொடர்பாக ஒருவருக்கு சந்தேகம் ஏற்பட்ட ஒருவருக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ளதாக வைத்தியர் சந்தே கப்படுபவராக இருந்தால், மேலும் வேலை வாய்ப்புப் பெறு வதற்கோ வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெறச்செல்வதற்கோ தேவைப்படும் சந்தர்ப்பத்தில் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளுதல் அவ சியமானதாகும்.

அதேபோல் இரத்ததானம் செய்யப் படும்போதும் இரத்த மாதிரி ஒவ் வொன்றிலும் எச்.ஐ.வி தொற்றுக் காணப் படுகின்றதா என்பதை அறிதல் அவசியம். இத்தகைய சந்தர்ப்பங்களில் இரத்த சோதனைகள் செய்து கொள்ளல் வேண்டும். சுய விருப்பின் பேரிலும் ஒருவர் இரத்தப் பரிசோதனை செய்து கொள ளலாம்.

எச்.ஐ.வி தொற்றுக்கு ஆளாகி யிருப்பதாக அறிவுறுத்தப்பட்டால் சோதனைப் பெறுபேற்றை அறிந்து கொள்ளத்தக்க வகையில் அவரைத் தயார்படுத்த வேண்டியது சுகாதார ஊழியர் ஒருவரினதும் பொறுப்பாகும். நோய் பற்றித் தீர்மானிப்பதற்காக எச்.ஐ.வி சோதனை நடத்துதல். இச் சோதனைப் பெறுபேறு அதனைக் கோரிய வைத்தியருக்கு மாத்திரமே வழங்கப்படும். ஒவ்வொரு சுகாதார ஊழி யரும் சோதனையின் அந்தரங்கத் தன் மையைப் பேணக்கடமைப்பட்டுள்ளனர்.

### எச்.ஐ.வி குருதிப் பரிசோதனையைச் செய்து கொள்ள வேண்டியோர் யார்?

- பாலியல் நடத்தைகள் தொடர்பாகச் சந்தேகம் உள்ளவர்களும்.
- எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ள தாக வைத்தியர் சந்தேகப்பட்டுள்ள போதும்.
- தொழில்வாய்ப்புப் பெறுவதற்கோ வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறச் செல்வதற்கு முன் தேவையாகக் கருதப படும் சந்தர்ப்பத்திலும்.
- எச்.ஐ.வி.குருதி மாற்றீடு செய்யும் போதும் குருதிச்சோதனைகள் செய்து கொள்ளல் வேண்டும்.

### குருதிச் சோதனையைச் செய்து கொள்ளக் கூடிய இடம் எது?

பாலியல் தொடர்புகள் முலம் கடத் தப்படும் நோய்கள் தொடர்பான பிணி யாய்வு நிலையங்களிலும்.

பொது வைத்தியசாலையிலும் ஆய்வுகூடங்களிலும்.

இரத்த வங்கியிலும்.

### சிகிச்சைமுறை

எச்.ஐ.வி தொற்றைப் பூரணமாகக் குண மாக்கத்தக்க எந்த மருந்தும் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் தொற்றடைந்தோரை ஆரோக்கியமாக வைத்திருக்கத்தக்க மருந்து வகை தற்போது பயன்பாட்டில் உள்ளன. இவை ரெட்ரோ வைரசுக் கொல்லி (Antiretroviral Drugs) மருந்துகள் எனப்படுகின்றன.

எயிட்ஸ் நோய் தொற்றுதலுடன் உயிர் வாழ வழமையாக எதிர்வு கூறப படும் காலத்தை விட எயிட்ஸ் நோயை உண்டாக்கும் எச்.ஐ.வி வைரசுக்கு எதிராக வழங்கப்படும் "Antiretroviral" சிகிச்சைகளைப் பெறுவோர் சராசரியாக 13 ஆண்டுகள் அதிக காலம் வாழ முடி கின்றமை ஆய்வுகளில் இருந்து கண்ட றியப்பட்டுள்ளது.

எயிட்ஸ் பரவுவதைத் தடுக்க தற் போது இருக்கும் ஏபிசி திட்டம மிகவும் பிரபலமான ஒன்று. அதாவது, ஏ- திரு மணதிற்கு முன் பாலுறவைத் தவிர்த்தல் பி-திருமணத்திற்குப் பின் உண்மையா யிருத்தல் சி-இரண்டும் முடியாத பட்சத்தில் ஆணுறை அணிதல. இது ஓரளவிற்குக் கட்டுப்படுத்தும் ஆரம்பகட்ட முயற்சி யாக இது உதவுகிறதே தவிரே இதுவே முடிவான தீர்வு அல்ல.

நெறி முறைகளைப் பின்பற்றி பாலு றவு நடத்தையில் மாற்றத்தைக் கொண்டு வருவதன் மூலம் எயிட்ஸின் போக் கையே தலைகீழாகத் திருப்பலாம் என்ப தற்குச் சான்று பகரும் வண்ணம் உகண்டா போன்ற சில நாடுகள் எயிட்ஸின் பிடியில மடிந்துக் கிடந்த நிலையி லிருந்து இன்று அவை எழுந்து நிமிர்ந்து நிற்கத் தொடங்கியுள்ளன.

### எயிட்ஸ் நோயாளிகளும் மனிதர்களே!

எயிட்ஸ் நோயாளிகள் சமூகத்தின் பார்வையில் வேண்டப்படாதவர்களா கவே கருதப்படுகின்றனர். இது தவறு. எயிடஸ் நோயாளியைப் பொறுத்த மட்டில் பாலுறவால் மாத்திரம் நோயைப பெற்றிருப்பார் என்று கூற முடியாது. சில சந்தர்ப்பங்களில் அத்தகைய பழக்கங் கள் இல்லாதவர்களும்கூட அறியாத சந் தர்ப்பங்களிலும் இந்நோய் தொற்றலாம். எனவே எயிட்ஸ் நோயாளிகளை சாதா ரண மனித்ர்களாகக் கருதி அவர்களுக் கு உரிய உரிமை களையும், சலுகைகளையும் வழங்க வேண்டியது சமூகத்தின் கடமை யாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டம் தரும் வீட்டு மனைகள்



பொதுவாக வீடு, தொழிற்சாலை ஆலயம் கட்டும் மனைகள், செவ்வகமாகவோ சதுரமாகவோ அமையலாம். அவ்வாறு அமையாமல் சில இடங்களில் ஏதாவது ஒரு பகுதி மட்டும், அளவில் வித்தியாசப்படும். இவ்வாறு அமையும்போது, ஒருபக்கம் மனை வளர்ந்து காணப்படும்.

வடகிழக்குப் பகுதியாகிய ஈசான்யம், அதிகமாக நீண்டு வளர்ந்து காணப்பட்டால் அந்த மனை அதிர்ஷ்டம் உள்ளதாகக் கருதப்படும். அதிக இலாபத்தை தரும்.

கிழக்குப் பக்கம் நீண்ட மனையானது, பெரும் புகழையும், ஜஸ்வர்யத்தையும் கொடுக்கும்.

தென்கிழக்கு பகுதியாகிய அக்னி மூலை வளர்ந்திருந்தால் அது, விபத்தை உண்டு செய்யும்.

தென்திசை வளர்ந்து காணப்பட்டால் தீராத் துயரத்தை உண்டு செய்யும்.

தென்மேற்கு மூலையாகிய நிருதி வளர்ந்திருந்தால் வழக்கு- மனவருத்தத்தை தரும்.

மேற்கு திசையாகிய வருண பாகம் வளர்ந்திருந்தால் சச்சரவையும், நீதி மன்ற வழக்குகளையும் ஏற்படுத்தும்.

வடமேற்கு பாகமாகிய வாயுமூலை வளர்ந்திருந்தால் குழப்பத்தை தரும்.

வட திசையாகிய குபேர மூலை வளர்ந்திருந்தால் கடன்களை நீக்க செல்வத்தை உண்டு செய்யும்.

கிழக்குப் பார்த்த வீடு, மேஷம் சிம்மம், தனுசு ராசிக்காரர்களுக்கு நன்மை செய்யும்.

தெற்குப் பார்த்த வாசல் வீடு ரிஷபம், கன்னி, மகர ராசிக்காரர்களுக்கு அதிர்ஷ்டத்தைத் தேடித்தரும்.

மேற்கு பார்த்த வாசல் வைத்த இடம் மிதுன, துலாம், கும்ப ராசிக்காரர்களுக்கு செல்வத்தை உண்டு செய்யும்.

வடக்குப் பார்த்த வாசல் வைத்த வீடு, கடக, விருச்சிக, மீன இராசிக்கரர்களுக்கு மன திருப்தியை உண்டு செய்யும்.

### சன்னியாசியாகும் யோகம்

சந்திரன், சனி திரேஷ்டானத்தில் இருந்து அங்காரக பகவானால் பார்க்கப்படால் அந்த ஜாதகர் கடும் தவம் செய்பவராக இருப்பார்.

சந்திர பகவான், செவ்வாயின் நவாம்சத்தை அடைந்து சனி பகவானால் பார்க்கப் பட்டால் அப்போது, சந்திரன் இருக்கும் நவாம்ச அதிபதியின் தன்மையைப் பொறுத்து சன்னியாசம் உண்டாகும்.

### கிரகங்களுக்கு ஏற்றபடி உண்டாகும் சன்னியாசியின் வகைகள்

சூரிய பகவான் சன்னியாச யோகத்தை உண்டு செய்தால் கடும் யோகியாகவும், பெரிய யாகங்கள் செய்யக் கூடியவராகவும் ஜாதகர் விளங்குவார்.

சந்திரபகவான் சன்னியாச யோகத்தை தந்தால் எப்போதும் நதிக்கரையில் இருப்பவராகவும், தியானங்கள் செய்பவராகவும் விளங்குவார்.

அங்காரகபகவான் சன்னியாச யோகத்தை வழங்கினால், பயங்கரமான மந்திரங்களை அறிந்தவராகவும், வேறு மதத்தில் நாட்டம் உள்ளவராகவும் விளங்குவார் அல்லது மதம் மாறுவார்.

புதபகவான் சன்னியாச யோகத்தை உண்டு செய்தால் வேறு மதம் அல்லது தனது குல தர்மத்தில் நாட்டம் கொண்டு யோகியாவார்.

குரு பகவான் சன்னியாச யோகத்தை வழங்கினால், அந்த ஜாதகர் தர்ம சாஸ்திரங்கள் அறிந்தவராகவும், தன்குலத்தில் சிறந்தவராகவும், உயர்ந்த சன்னியாசியாகவும் விளங்குவார்.

சுக்கிரபகவான் சன்னியாச யோகத்தை உண்டாக்கினால் அவர், பெரும்பாலும் மத மாற்றத்தை அடைந்தவராகவும், தன் தெய்வத்தை விட்டு வேறு தெய்வங்களை உபாசிப்பவராகவும், அலங்கார பூஜைகள் செய்பவராகவும், பேச்சில் வல்லவரான சன்னியாசியாகவும் விளங்குவார்.

சனிபகவான் சன்னியாச யோகத்தை வழங்கினால் அனைத்தையும் துறந்தவனாகவும், கர்ம மார்க்கங்களில் நாட்டம் இல்லாத சன்னியாச யோகத்தை அடைந்தவராக இருப்பார்.




### ருது பலன்கள்

ஞாயிற்றுக்கிழமை–புத்திர தோஷத்தை தரும்.
திங்கட்கிழமை – பதி விரதையாகவும், குடும்ப ஒற்றுமையை உண்டு செய்யும்.
செவ்வாய்க்கிழமை – கணவனுடன் மன வருத்தத்தை ஏற்படுத்தும்.
புதன்கிழமை– புகழ்பெற்ற புத்திரலாபம்.
வியாழக்கிழமை – நாணயமான வார்த்தைகளும், அதிக நேர்மையும் கொடுக்கும்.
வெள்ளிக்கிழமை– பெண் குழந்தைகளால் பெருமை
சனிக்கிழமை–கடன் உண்டு செய்யும்.

# விக்கிலீக்ஸ் இணையம் ஊடாக அமெ.சூழ்ச்சித் திட்டம் அம்பலம்!

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

விக்கிலீக்ஸ் இணையம் ஊடாக அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சித் திட்டங்கள் அம்பலமாகியுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்திலேயே இலங்கைக்கு எதிராக அமெரிக்கா செயற்பட்டு வந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் விக்கிலீக்ஸ் இணையம் வெளியிட்ட தகவல்களின் மூலம் இந்த விடயம் அம்பலமாகியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியில் அமெரிக்காவே இலங்கைக்கு எதிரான சதித்திட்டங்களை தீட்டியுள்ளதாகவும் சர்வதேச ரீதியாக இலங்கையை தனிமைப்படுத்த அமெரிக்கா முனைப்புக் காட்டி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



கட்டளைகளுக்கு அடிபணியாத காரணத்தினால் அமெரிக்கா, இலங்கை மீது காழ்ப்புணர்ச்சியுடன் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விக்கிலீக்ஸ் தகவல்கள் தொடர்பில் கருத்துக்கள் எதனையும் வெளியிட முடியாதென வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# பெறுமதிசேர் வரி ஏய்ப்பு தொடர்பில் தேடப்பட்ட வர்த்தகர் சென்னையில் கைது

(கொழும்பு)

பாரிய அளவில் பெறுமதிசேர் வரி ஏய்ப்பு தொடர்பில் கைது செய்வதற்காக தேடப்பட்டு வந்த நிலையில் 2006 ஆம் ஆண்டு நாட்டில் இருந்து தப்பிச்சென்ற செல்வந்தரான முஸ்லிம் வர்த்தகர் சென்னையில் மறைந்திருந்த நிலையில் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என புலனாய்வுப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். தேசிய இறை வரி திணைக்களத்தில் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து, இவர் 400கோடி ரூபா பெறுமதிசேர் வரி ஏய்ப்பு செய்துள்ளார்.

இந்த வாத்த்கர் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேசப் பொலிஸார் அறிவித்துள்ளதாக புலனாய்வுப்பிரிவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

பெறுமதி சேர்வரி ஏய்ப்பு தொடர்பில் 8 வர்த்தகர்களை கைது செய்வதற்காக தேடி வருவதாகவும் அவர் இரகசியமான முறையில் நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தகவல் கிடைத்ததை அடுத்து நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்று சர்வதேசப் பொலிஸார் ஊடாக கண்ட இடத்தில் கைது செய்வதற்கான சிவப்பு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டதாகவும் புலனாய்வுப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். மேற்படி முஸ்லிம் வர்த்தகர் சென்னையில் விடுதியொன்றில் தங்கியிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளார். இவர் சிவப்பு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டவர்களில் ஒருவர் எனவும் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன. கைதுசெய்யப்பட்ட நபரை வெளிவிவகார அமைச்சின் ஊடாக இலங்கை அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெறுமதி சேர் வரி ஏய்ப்பு தொடர்பில் தேடப்பட்டு வரும் ஏனைய 7 வர்த்தகர்கள் மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு தப்பிச்சென்றுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன என புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

இவர்களைக் கைது செய்வதற்காக சர்வதேச பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். பெறுமதி சேர் வரி ஏய்ப்பு சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட தேசிய இறை வரி திணைக்களத்தின் 6 அதிகாரிகள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வடக்கு மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் கிழக்கு மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு மக்களுக்கு வழங்கப்படும் அதே சலுகைகள் கிழக்கு மக்களுக்கும் வழங்கப்படவேண்டுமென நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுடன் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மக்களுக்கு வழங்கப்படும் அதேயளவு நிவாரணங்கள் கிழக்கு மக்களுக்கும் வழங்கப்பட வேண்டியது அவசியமானதென அவர் தெரிவித்துள்ளார்.

ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்களுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்குமிடையில் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் சந்திப்பு நடை பெற்றுள்ளது.

அரசியல் சாசனத்திருத் தங்களின் மூலம் அதிகா ரப் பகிர்வி னை ஏற்படுத் துவது குறித்து இந்த சந்திப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படு கிறது.

முஸ்லிம் சமூகத்தை ஒன்றுதிரட்ட வேண்டியது முஸ்லிம் காங்கிரஸின் கடமை யென வெளிவிவகார அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# வடமாகாணத்துக்கான முதலீடு தொடர்பில் ஆராயும் மாநாடு

வடமாகாணத்தின் முதலீடு, வளங்கள் தொடர்பாக விரிவாக ஆராயும் பொருட்டு "உள்ளூராட்சி மாநாடும், கண்காட்சி" ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 28ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை மூன்று நாட்கள் வவுனியாவில் நடைபெறவுள்ள இம் மாநாட்டின் போது வடமாகாண அபிவிருத்திக்கான ஐந்தாண்டு திட்டங்கள் தயாரிப்பது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதற்காக ஏசியன் பவுண்டேசன் ஜி.டி. இஸட் ஆகியன 200 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கவுள்ளதாகவும் ஆளுநர் சுட்டிக் காட்டினார்.

மஹிந்த சிந்தனையில் கூறப்பட்டுள்ள 'உள்ளூர் மட்ட அபிவிருத்தி ஊடான தேசிய அபிவிருத்தி' என்ற தொனிப்பொருளுக்கு அமைய இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியாவுக்கான உள்ளூராட்சிப் பிராந்திய உதவி ஆணையாளர் எஸ்.அச்சுதன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பலர் பொலிஸாரால் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராமநாதபுரம் மற்றும் வன்னேரிக்குளம் பகுதிகளில் கிளிநொச்சி பொலிஸாரின் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை மூலம் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இரண்டு நபர்களிடம் இருந்து இரண்டு பரல் கசிப்பு பறிமுதல் செய்யப்பட்டதுடன் குறித்த நபர்கள் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கை விசாரித்த நீதவான் இருவருக்கும் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக செலுத்துமாறு தீர்ப்பளித்ததுடன் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை இராமநாதபுரம் பகுதி வாணிப நிலையமொன்றில் லேகியம் விற்பனை செய்த நபர் ஒருவரும் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார். குறித்த நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய போது வழக்கை விசாரித்த நீதவான் 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு தீர்ப்பளித்ததுடன் எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டார்.

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட குற்றத் தடுப்பு நடவடிக்கையில் 5 போத்தல் கசிப்பு, 15 போத்தல் கோடா என்பன பறிமுதல் செய்யப்பட்டதுடன் குறித்த நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு கூறி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை இப் பகுதியில் பிறிதொரு நபரிடம் இருந்து கசிப்பு உற்பத்திக்கான 12 போத்தல் கோடா பறிமுதல் செய்யப்பட்டதுடன் குறித்த நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதவான் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு தீர்ப்பளித்ததுடன் குறித்த நபர் எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டார்.

கிளிநொச்சி பொலிஸாரின் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் அண்மை நாட்களாக தொடர் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# வீதி விபத்தில் இளைஞர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவமானது இராமநாதபுரம் - தர்மபுரம் பிரதான வீதியில் இடம்பெற்றுள் ளது.

இப்பகுதியில் சிரமதானப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராமநாதபுரம் 5ஆம் யூனிற்றைச் சேர்ந்த பரமசிவம் ரமேஸ் (வயது -30) என்ற இளைஞனே படுகாயமடைந்து தர்மபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர் பேருந்து ஒன்றிற்கு வழிவிட முயன்றவேளை மோட்டார் சைக்கிளின் நிறுத்தி இயங்காததால் வீதியின் ஓரமாக சிரமதானப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞன் மீது மோதியுள்ளார்.

இதனால் மேற்படி இளைஞன் தலை மற்றும் கை, கால்களில் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்றுள்ளார். (ஸ்ரீ)

# மலையக இளைஞர்களுக்கு — தரிசு நில காணிகள் —

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

மலையக இளைஞர்களுக்கும் தரிசு நிலக்காணிகள் பெற்றுக் கொடுக்கப்படுமென்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். மலையகப் பெருந் தோட்டங்களில் தரிசாகக் கைவிடப்பட்டுள்ள காணிகளில் இவ்வாறு தோட்ட இள்ஞர்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்படுமென்று அமைச்சர் மேலும் கூறினார். பெருந் தோட்டத் தரிசு நிலங்களில் மீள் பயிர்ச்செய்கை மேற் கொள்வதில் இளைஞர்களையும் இணைத்துக் கொண்டு அரசாங்கம் செயற்படுமென்றும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# வடக்கின் துரித மீட்சிப் பணிமனை

## கிளிநொச்சி கச்சேரியில் திறந்துவைப்பு

(கொழும்பு)

வடக்கின் துரித மீட்சித் திட்டப் பணிமனை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டமானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் நடைமுறைப் படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரை இந்த நடவடிக்கைகள் கடந்த வருடமே ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் இதற்கான பிரத்தியேக கட்டடம் ஒன்று தற்பொழுதுதான் அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் போது இந்தத் திட்டம் மிகவும் உதவியாக இருந்ததாகவும் தற்போது இம் மாவட்டத்தில் பல்வேறு தேவைகள் இருப்பதால் இதன் செயற்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சேதமடைந்த அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வீதி அபிவிருத்திப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகள் இந்தப் பணி மனையூடாக முன்னெடுக்கப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

# இலங்கையில் சர்வதேச சமாதான நிறுவகமொன்று நிறுவப்படல் வேண்டும்

## வீரமந்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் ரீதியான சிகிச்சைகள் வழங்கப்பட வேண்டுமென நீதவான் சீ.ஜீ. வீரமந்திரி தெரிவித்துள்ளார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான முறையில் கல்வி கற்றுக் கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதெனவும் அதன்மூலமே இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மாணவர்களுக்கு சகல மொழிகளையும் கற்பிக்க வேண்டியது மிகவும் அவசியமானது எனத் தெரிவித்துள்ள அவர் மாணவர்கள் மூன்று மொழிகளையும் கற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயக் கொள்கையாக நாட்டில் அமுல்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பது தொடர்பான சர்வதேச சமாதான நிறுவகமொன்றை இலங்கையில் நிறுவமுடியும் எனவும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன வினால் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி முறைமையினால் பல்வேறு குழப்ப நிலைமைகள் ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த ஜனாதிபதி முறைமையினால் மக்களின் மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும் நிறைவேற்று அதிகார முறைமையினால் நாட்டுக்கு நன்மை கிட்டாது எனவும் அவர் சுட்டிக்காட்டியதுடன் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியொருவர் பதவி வகிப்பது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் எனவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# பிரேசிலிலிருந்து சீனி இறக்குமதி செய்து குறைந்த விலையில் விநியோகிக்க திட்டம்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு



பிரேசிலிலிருந்து சீனி இறக்குமதி செய்து குறை ந்த விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண் டோ தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது தொடர்பில் தமது நேரடி கவனத்தைச் செலுத்தப் போவதாக அவர் குறிப்பிட்டார்.

புதிய அமைச்சரவையில் இரண்டாவது தடவையாகவும் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ மக்களுக்கு சுமை ஏற்படாத வகையில் தேவையான சகல அத்தியாவசியப் பொருட்களையும் பண்டிகைக் காலத்தில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

போதுமானளவில் அரிசி கையிருப்பில் உள்ளதால் தேவைப்படும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களை இந்தியா, சீனா, ஜப்பான், அவுஸ்திரேலியா, துருக்கி போன்ற நாடுகளில் இறக்குமதி செய்ய தீர்மானித்துள் ளதாகத் தெரிவித்தார்.

அனைத்துப் பொருட்களையும் கட்டுப் பாட்டு விலையில் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்த அவர் பண்டிகைக் காலங்களில் தட்டுப்பாடின்றி பொருட்களை கொள்வனவு செய்வதும் உறுதி செய்யப்படும் எனவும் குறிப் பிட்டார்.

இதேவேளை பிரேசில் தூதுவர் பெட்ரோ ஹென்றிலொப்ஸ்சுக்கும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோவுக்குமிடை யிலான சந்திப்பொன்று வர்த்தக நுகர்வோர் அமைச்சில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் பொதுவான பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் பிரேசிலில் இருந்து சீனியை குறைந்த விலையில் இறக்குமதி செய்வதற்கு உதவுவதாக பிரேசில் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியில் அரசாங்கம் தலையிட்டு நேரடிக் கொள்வனவை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இடைத்தரகர்களின் தலையீடின்றி பொருட்களைக் கொள்வனவு செய்து குறைந்த விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



வல்வெட்டித்துறை பிரதேசத்திற்குட்பட்ட 15 பாலர் பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சை அண்மையில் வல்வெட்டித்துறை மதவடி விக்னேஸ்வரா பாலர் பாடசாலையில் இடம்பெற்றது. இதில் பங்குபற்றிய மாணவர்களையும் வழிநடத்திய ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: வல்வெட்டித்துறை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏமன் குண்டு வெடிப்புக்கு அல்கொய்தா பொறுப்பேற்பு

ஏமன் நாட்டில் கடந்த 24 ஆம் திகதி அன்று நடந்த கார் வெடி குண்டு தாக்குதலில் சியா பிரிவை சேர்ந்த 23 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் மதவாத பிரிவு பொறுப்பேற்றுள்ளது. இது குறித்து இணையத்தளம் மூலம் வெளியிட்ட தகவலில் இது போன்ற தாக்குதலை தொடரப் போவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரேபியத் தீபகற்ப பகுதியில் இயங்கும் அல்கொய்தா இயக்கத்தின் மதவாத பிரிவு வெளியிட்ட இணையத்தள அறிக்கையில் எங்களுடைய சன்னி முஸ்லிம் சகோதரர்களை பாதுகாக்கவே இந்த தாக்குதலை நடத்தினோம். சன்னி முஸ்லிம்களின் வீடுகளை சேதப்படுத்துவதோடு அவர்களை கொன்று குவிப்பவர்களுக்கு பதிலடி கொடுப்பதற்காக சிறப்பு பிரிவை உருவாக்கி இருக்கிறோம் என கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வடகொரியா - தென்கொரியா இடையே பதற்றத்தைத் தணிக்க பேச்சுவார்த்தை

## அமெரிக்க ஒத்துழைப்பை நாடுகிறது சீனா

(பீஜிங்)

வடகொரியா, தென்கொரியா இடையேயான இராணுவ ரீதியிலான பதற்றத்தைத் தணிக்க பேச்சுவார்த்தை நடத்திட அமெரிக்கா உதவ வேண்டும் என சீனா நேற்று முன்தினம் கோரிக்கைவிடுத்துள்ளது.

இதற்கு ஒத்துழைக்க அமெரிக்கா சம்மதித்திருக்கிறது. கொரிய தீபகற்பத்தில் இராணுவ ரீதியிலான பதற்றம் நிலவிவருகிறது. ஓரணி நாடுகளான அமெரிக்காவும் தென்கொரியாவும் வழக்கமான கடற்படை ஒத்திகையை தொடங்கியுள்ளன. இந்நிலையில் வடகொரியாவும் பதிலடி தர தயாராக இருக்கிறது. இந்நிலையில் வடகொரியாவுக்கு நட்பு நாடான சீனா தனது தூதரை தென்கொரியாவுக்கு அனுப்பி பேச்சு நடத்தியிருக்கிறது.

சீனப் பிரதிநிதி டாய் பிங்கு தென்கொரிய தலைநகரான சியோல் சென்று அந்நாட்டு அதிபர் லீ மியூங் பக்கை சந்தித்துப் பேசிவிட்டு ஞாயிற்றுக்கிழமை சீனா திரும்பியிருக்கிறார். இந்தப் பேச்சுவார்த்தை குறித்து அவர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டனுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தார். இப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காண பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய சீனாவுக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு அளிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளது. இது விடயத்தில் அடிக்கடி தொடர்புகொண்டு பேசுவதாக ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முக்கிய நாடுகள் அவசர ஆலோசனை நடத்துவது அவசியம். 2005 ஆம் ஆண்டு வடகொரியாவை அதன் அணுசக்தித் திட்டங்களை கைவிடச் செய்வதற்காக அமெரிக்கா, சீனா, தென்கொரியா, வட கொரியா, ஜப்பான், ரஷ்யா ஆகிய 6 நாடுகளின் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது இந்த 6 நாடுகள் மீண்டும் அவசர ஆலோசனை நடத்தலாம் என டாய் பிங்கு ஞாயிற்றுக்கிழமை யோசனை தெரிவித்தார். இதற்கு சம்மதிக்க முடியாது என தென்கொரியா உடனடியாக கருத்துத் தெரிவித்தது. (ஸ்ரீ)

# விக்கிலீக்ஸின் நடவடிக்கைகள் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல்!

## ஐரோப்பிய நாடுகள் கடும் அதிருப்தி

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய நாடுகள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

அமெரிக்கத் தூதுவர்களினால் பரிமாறிக் கொள்ளப்பட்ட இரகசிய ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையம் பகிரங்கப்படுத்தியுள்ளது. ஜெர்மனி, பிரான்ஸ், ரஷ்யா உள்ளிட்ட பல நாட்டுத் தலைவர்கள் இந்த தரவு வெளியீட்டை எதிர்த்துள்ளனர்.

இணையத் தளத்தின் நடவடிக்கைகள் ஜன நாயகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதென பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலோஸ் சார்கோசி தெரிவித்துள்ளார். அமெரிக்கத் தூதுவராலயங்களில் பரிமாறிக் கொள்ளப்பட்ட 2 இலட்சத்து 50 ஆயிரம் ஆவணங்களை அண்மையில் விக்கிலீக்ஸ் வெளியிட்டது.

இராஜதந்திர இரகசியங்களைப் பாதுகாத்துக் கொள்ள அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவின் பல நாடுகள் இந்தத் தரவு வெளியீட்டிற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இந்த இணையத்தளத்தில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் தொடர்பான தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை விக்கிலீக்ஸினால் வெளியிடப்பட்ட தரவுகள் சரியானவை என பாகிஸ்தான் ஒப்புக் கொண்டுள்ளது. இந்தத் தரவு வெளியீடு தொடர்பில் ஈரான் கடும் அதிருப்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)






தென்கொரியா மீது வடகொரியா போர் பகையினை உண்டாக்கியதை கண்டித்து அந்நாட்டு மூத்த குடிமக்கள் யோங்பயோன் நகரில் வடகொரிய ஜனாதிபதி கிம் இரண்டாம் ஜோங்கின் உருவ பொம்மையினை எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# பாகிஸ்தானில் இளம் பெண் மூக்கை அறுத்து கொடுமை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தவறான நடத்தையில் ஈடுபட்டதாக இளம் பெண்ணை அவளது உறவினர்கள் மூக்கை அறு த்தும் தனி அறையில் பூட்டி வைத்தும் சித்ரவதை செய்துள்ளனர்.

பாகிஸ்தானில் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள குச்சரன் வாலா கிராமத்தினைச் சேர்ந்தவர் ஆஷியா பீபி. இவர் திரு மணமானவர். கணவர் முல்டானில் பணியாற்றுவதால் மனைவியைக் காண வருவதில்லை.

இதனால் ஆஷியா பீபிக்கு அயல் வீட்டில் வசிக்கும் வாலிபருடன் தொடர்பு ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. இதனை அறிந்த அவரது உறவினர்கள் ஆத்திரமடைந்து அவரை அடித்து கொடுமைப்படுத்தினர்.

சம்பவம் குறித்து அறிந்த பொலிஸார் அப்பெண்ணை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். பொலிஸார் கணவரின் சகோதரிகள், மைத்துனர் மீது வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர். (ஸ்ரீ-2)



தாய்லாந்தில் ஆளும் கட்சியான ஜனநாயக கட்சியின் தலைவரும் அந்நாட்டு பிரதமருமான அபிஹிஸ்ட்வெஜிஜிவா மீது நிதி மோசடி புகார் எழுந்ததைத் தொடர்ந்து தலைநகர் பாங்கொங்கில் உள்ள அரசியலமைப்பு நீதி மன்றில் ஆஜராகி விளக்கம் அளிக்க வந்தார்.

# வடகொரியா மேலும் தாக்குதல் நடத்தினால் அதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும்

## தென்கொரிய அதிபர் எச்சரிக்கை

வடகொரியா மேலும் தாக்குதல் நடத்தினால் அதற்கு சரியான பதிலடி கொடுக்கப்படும் என தென்கொரிய அதிபர் லீ மியுங் பாக் முதன்முறையாக எச்சரித்துள்ளார்.

வடகொரிய தாக்குதலுக்கு பின் முதன் முதலாக செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அதிபர் லீ மியுங் பாக், வடகொரியா இனி மேலும் தாக்குதல் நடத்தினால் அதற்கு சரியான பதிலடி கொடுக்கப்படும்.

போர்க் காலத்தில் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்படக் கூடாது என தடை விதிக்கப்பட்டிருந்தும் வடகொரியா பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இது மனிதாபிமானமற்ற குற்றம் எனக் கடுமையாக எச்சரித்துள்ளார்.

தென்கொரியப் படையினருடன் கூட்டு இராணுவப் பயிற்சி மேற்கொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தினரிடம் பேசிய அவர் தக்க சமயத்தில் உதவி செய்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்நிலையில் சீனா, ஜப்பான், அமெரிக்கா, இரண்டு கொரிய நாடுகள், ரஷ்யா ஆகிய ஆறு நாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தையை அவசரமாக ஆரம்பிக்க வேண்டும் என சீனா வற்புறுத்தியுள்ளது. மேலும் கொரிய தீபகற்பத்தில் அமைதியை நிலைநாட்டவும் அது முயல்கிறது. இதற்கிடையில் தென்கொரிய மற்றும் அமெரிக்கப்படைகள் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டன. (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் மஹிந்த சிந்தனையின் கீழ் 11 இலட்சம் மரம் நடுகைத் திட்டத்திற்கு அமைவாக மரநடுகைச் செயற்பாடு நடைபெற்றது. இந் நிகழ்வில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் விரிவுரையாளர்கள், உள்ளகப் பயிற்சி முகிழ்நிலை ஆசிரியர்கள் இணைந்து மரம் நடுவதை படங்களில் காணலாம்.

### வெள்ளைக் கொடி விவகாரம் குறித்த

# தொலைக்காட்சி செய்தியை சான்றாதாரமாக ஏற்பதா?

## இன்று தீர்ப்பு

வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பாக பிரதிவாதியான சரத் பொன்சேகாவினால் கூறப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்ட தொலைக்காட்சி செய்தியை வழக்கின் சான்றாதாரங்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பான தீர்ப்பை இன்று புதன்கிழமை வழங்குவதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பிலான வழக்கின் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையின் போது இரு தரப்பினராலும் முன் வைக்கப்பட்ட வாதப் பிரதிவாதங்களை அவதானித்ததன் பின்னரே மூன்று நீதிபதிகள் கொண்ட குழு இந்த தீர்மானத்தை அறிவித்தது.

வடக்கில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைவதற்கு வருகைதந்த விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்த முக்கியஸ்தர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் உத்தரவின் பேரில் சுட்டுக் கொல்லப்பட்டதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியதாக சண்டே லீடர் பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணையே கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது.

வெள்ளைக் கொடி விவகார வழக்கின் நேற்று முன்தினம் விசாரணை ஆரம்பிக்கப்பட்ட போது தொலைக்காட்சி நிறுவனங்களை சேர்ந்த ஏழு சாட்சிகளும் மன்றில் ஆஜராகி யிருந்தனர்.

வழக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்னதாக தெரண தொலைக்காட்சியின் இரத்தினபுரி மாவட்டத்திற்கான பிரதேச ஊடக வியலாளர் சாட்சிக் கூண்டுக்குள் ஏற்றப்பட்டதுடன் அவரின் சாட்சியை நெறிப்படுத்துவதற்கு பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நவரத்ன பண்டார தயாரானார்.

இதன் போது குறுக்கிட்ட பிரதிவாதியின் சட்டத் தரணியான நளீன் லதுவ ஹெட்டி தொலைக்காட்சி ஒளிப்பதிவின் மூலப்பிரதியை மன்றில் சமர்ப்பிக்குமாறு கடந்த விசாரணையின் போது கேட்டுக் கொண்டேன். அதனை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் அன்றைய தினம் உத்தரவிட்டது.

இதனிடையே எழுந்த தெரண தொலைக்காட்சி சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரண தொலைக்காட்சி நிறுவனத்தில் மூலப்பிரதி இல்லை. தொகுக்கப்பட்ட நாடாவே இருக்கின்றது என்று கூறுகையில் தெரண தொலைக்காட்சியின் செய்தியாசிரியரால் தொகுக்கப்பட்ட நாடாவும் மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

உடனடியாகவே எழுந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வசந்த நவரத்ன பண்டார 1995 ஆம் ஆண்டு 14 ஆம் பிரிவு சாட்சி விசேட ஏற்பாடுகள் சட்ட மூலத்தின் பிரகாரம் மூலம் இல்லாவிடின் எந்தவொரு அறிக்கையின் மூலமாகவோ அல்லது சமகாலத்தில் பதிவு செய்யப்பட்ட இன்றேல் மீள்பதிவு செய்யப்பட்டதை வழக்கின் சான்றாதாரங்களில் ஒன்றாகவே எடுத்துக் கொள்ளலாம். சட்டத்தின் பிரகாரம் மூலம் தேவையென்று எங்குமே குறிப்பிடப்பட்டிருக்க வில்லை பிரட்கா ஜான்ஸ் கூறியதை தெளிவுப்படுத்த வேண்டுமாயின் கோத்தபாய ராஜபக்ஷ, புலித்தேவன், நடேசன், ரமேஷ் ஆகியோரின் பெயர்களை கூறாமல் பிரதிவாதியினால் அதனை தெளிவுப்படுத்தவே முடியாது. சாட்சி விசேட ஏற்பாடுகள் சட்ட மூலத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டது. சாட்சி சான்றாதாரங்களில் ஒன்றாக பதி செய்துக்கொள்ள வேண்டுமாயின் எந்தவொரு மாற்றம் செய்யக் கூடாது திருத்தப்படவோ, மாற்றப்படவோ இல்லை என நிரூபிக்கப்பட்டால் மட்டுமே இதனை சாட்சியின் சான்றாதாரங்களில் ஒன்றாக குறித்துக் கொள்ள முடியும்.

இதுதொடர்பில்சாட்சியானதெரண தொலைக்காட்சியின் இரத்தினபுரி மாவட்ட ஊடகவியாளர் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு வாக்கு மூலம் அளித்துள்ளார். பிரதிவாதியின் உரையில் செய்திக்காக ஒரு பகுதி எடுக்கப்பட்டுள்ளதே தவிர அந்தப் பகுதி திருத்தப்படவோ மாற்றப்படவோ இல்லை என அந்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதன் போது குறுக்கிட்ட பிரதிவாதியின் சட்டத்தரணியான நளின் லதுவகெட்டி பதிவு செய்யப்பட்டதிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதியை நீதிமன்றத்திற்கு காண்பித்தால் அது திருத்தப்பட்டதாகவே அர்த்தப்படும் என்பதனால் அதனை சாட்சி சான்றாதாரங்களில் ஒன்றாக எடுத்துக்கொள்ள முடியாது. இரு தரப்பு வாத பிரதிவாதங்களை அவதானித்த சட்டத்தரணிகள் தொலைக்காட்சி உரையை வழக்கின் சாட்சி சான்றாதாரங்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பிலான தீர்ப்பை இன்று புதன்கிழமை வழங்குவதாக அறிவித்தது. (ஸ்ரீ-2)

## ஹரி பொட்டர் புதிய படம் ரூபா 817 கோடி வசூல்

உலகம் முழுவதும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பெரிதும் கவர்ந்த ஹரி பொட்டர் படங்களின் வரிசையில் 7 ஆவது படமாக ஹரிபொட்டர் அண்டு திடெத்லி ஹாலோவ்ஸ் என்ற புதிய படம் வெளியாகியுள்ளது.

உலகம் முழுவதும் 62 நாடுகளில் ஓடிக் கொண்டிருக்கும் இந்தப் படத்தின் மூலம் இதுவரை வசூலான தொகை இந்திய மதிப்பில் ரூபா817 கோடியைத் தாண்டி விட்டது.

இன்னும் இரண்டு வாரங்களில் உலக அளவிலான வசூல் தொகை மேலும் 4 மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவில் உள்ள திரையரங்குகள் மூலமாக இதுவரை ரூ 250 கோடி தொகை கிடைத்துள்ளது.

வெளிநாடுகளில் பிரான்ஸ் முதலிடம் வகிக்கிறது. அந்த நாட்டில் மட்டும் ரூபா 95 கோடி வசூலாகி இருக்கிறது. (ஸ்ரீ)

# இளவாலை வித்தகபுரம் பகுதிகளில் ஒரு மாதத்திற்குள் மீள்குடியேற்றம்

### பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

இளவாலை வித்தகபுரம் பகுதிகளில் ஒரு மாதத்திற்குள் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படும் என பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் பாராளுமன்றத்தில் தெரிவித் துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் உள்ளடக்கப்பட்டிருந்த இளவாலை மற்றும் வித்தகபுரம் பிரதேசங் களில் அடுத்துவரும் ஒரு மாத காலத்திற்குள் மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர் என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயக மூர்த்தி கேட்டிருந்த வாய்மூல விடைக்கான வினாவுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து பதிலளிக்கையில், யாழ்ப்பாணம் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் வசித்த மக்களை கட்டம் கட்டமாக மீள்குடியேற்றி வருகிறோம்.

இதன்படி இளவாலை வடமேற்குவித்தகபுரம், இளவாலை வடக்கு ஆகிய பகுதிகளில் ஒரு மாத காலத்தில் மக்கள் மீள்குடியேற்றப்பட உள்ளனர். இதேபோன்று மயிலிட்டியில் கண்ணி வெடி அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு விரைவில் அங்கும் மீனவ குடும்பங்கள் மீள்குடியேற்றப்படுவர்.

மயிலிட்டி பகுதியொன்று அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளது. அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள மக்களை கட்டம் கட்டமாக மீள்குடியேற்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

மயிலிட்டியில் மக்களை மீள் குடியேற்றுவதற்காக கண்ணிவெடிகள் அகற்றுவதற்கு யாழ்.இராணுவத்தளபதியுடன் பேசி நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். இங்கு மக்களை மீள் குடியேற்ற ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனக் கூறினார். (ஸ்ரீ-2)



2011 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளின் நடவடிக்கைகளை முன் திட்டமிடல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். கல்வி வலய ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா விளக்கமளிப்பதையும் கலந்து கொண்ட அதிபர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லவனைக் கண்டு அஞ்சாதீர்கள்! உங்களின் நீடித்துழைக்கும் ஆற்றல் மட்டுமே அனைத்தையும் வெல்லும். – ஜாக்கி சினீசன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# விக்கிலீக்ஸ் வெளியிட்ட ஆவணங்களால் நாடுகளுக்கிடையிலான உறவுக்கு ஆபத்து

## இலங்கைத் தூதரகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

விக்கிலீக்ஸ்இணையத்தளம் வெளியிடவுள்ள வகைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் இனங்காணப்பட்டவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதுடன் நாடுகளிற்கிடையிலான உறவுகளையும் ஆபத்திற்குள்ளாக்கும் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளரான கிளென் டேவிஸ் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கசிய விடக்கூடிய வகைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் தொடர்பில் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் கருத்துக்கூற மாட்டாது. வகைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் விக்கிலீக்ஸினால் அதிகாரமின்றி வெளியிடப்படுவது இனங்காணப்பட்ட தனி நபர்களின் உயிருக்குமாத்திரமல்லாமல் பூகோள ரீதியில் நாடுகளுக்கிடையிலான உறவுகளுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும்.

அதன் தாக்கத்தைக் கருத்திற் கொண்டு இத்தகைய அனுமதியற்ற வெளிப்படுத்தல்களை நாம் கண்டிக்கின்றோம். அத்துடன் பாதுகாப்பு மீறல்களைத் தடுப்பதற்காக ஒவ்வொரு நடவடிக்கையையும் நாம் மேற்கொள்கிறோம்.

ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட எந்த ஆவணங்களுக்கும் உண்மைத்தன்மை குறித்து நாம் பேசமுடியாது. இராஜதந்திர மட்டத்திலுள்ள கேபிள் எழுத்தாக்கம் குறித்து நாம் பேசலாம். கேபிள் எழுத்தாக்கம் என்பது கேபிள் நாளாந்த ஆய்வுகள் மதிப்பீடுகள் என்பவற்றை பிரதிபலிக்கின்றன. இக் கேபிள்கள் அடிக்கடி வெளிநாட்டுக் கொள்கையின் முழுமைப்படுத்தப்படாத வெளிப்படுத்தலாகும். அவை அமெரிக்க கொள்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதாக பார்க்கப்படக்கூடாது. (எ-1)

# அரசாங்கத்துடன் பேச்சுநடத்த கூட்டமைப்பு தயாராக வேண்டும்

## சிவாஜிலிங்கம் கோரிக்கை

(சென்னை)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் காலம் தாழ்த்தாமல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டுமென தமிழ்த்தேசிய விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். அதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சரணாகதி அரசியல் செய்ய முற்படாமல் உரிமைப்போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறிகையில்,

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்ளவில்லை. அரசாங்கத்திற்கு நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்துவதற்காக இதில் கலந்துகொள்ளவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் நிலவும் விலைவாசியுயர்வு, வடக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களின் குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு போன்றவற்றில் எந்தத் தீர்வையும் திட்டவட்டமான நிலைப்பாட்டையும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் வழங்கவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு குறித்து பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காமலும் வடக்குக்கிழக்கு மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் அவர்களின் பங்களிப்பை பெறாமலும் அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்வதன் மூலம் தமிழ் மக்களை அரசாங்கம் அவமதித்து வருகின்றது.

இனிமேலும் காலம் தாழ்த்தாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

1979 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் மூன்று ஆண்டுகள் மாத்திரமே நடைமுறையில் இருக்கும் என்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் வாக்குறுதியை நம்பி தமிழர் விடுதலைக்கூட்டணி அதை எதிர்த்து வாக்களிக்கவில்லை. ஆனால் 31 ஆண்டுகள் கடந்தும் இன்னும் பயங்கரவாதச் தடைச்சட்டம் நீக்கப்படாமல் உள்ளது. அதனால் பல்லாயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதையும் அவர்கள் அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருப்பதையும் நாடு அறியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரணாகதி அரசியல் செய்ய முற்படாமல் உரிமைப்போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இந்தியாவும் மேற்கு நாடுகளும் அழுத்தங்கள் கொடுப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அதற்கு இடையூறாக நடந்துகொள்ளக்கூடாது எனக் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே வடக்குக்கிழக்கு மக்கள் அதிக வாக்குகளை அளித்தார்கள். அக் கட்சிக்கு 14 நாடாளுமன்ற ஆசனங்கள் கிடைத்தன. அதனால் தமிழ் மக்கள் சார்பாக அவர்களுடன் அரசாங்கம் பேசவேண்டியுள்ளதெனவும் சிவாஜிலிங்கம் கூறினார். (சு-5)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு லண்டனில் கிளை திறப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரித்தானியக் கிளை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு வெளியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட முதற் கிளை இதுவாகும்.

பிரித்தானியக் கிளையின் தலைவராக சட்டத்தரணி இரத்தினசிங்கமும், உபதலைவராக கலாநிதி சிறிநிவாசன், கலாநிதி ஏ.கே. மனோகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செயலாளராக வேலுப்பிள்ளை ஜெகேந்திரபோஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 21 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குலக நாடுகளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தும் வகையில் அதற்கான கிளைகளை ஸ்தாபிக்கும் திட்டத்தின் கீழ் பிரித்தானியக் கிளை அமைக்கப்பட்டிருப்பதாகவும் தாயகத்திலுள்ள மக்களின் அரசியல் உரிமைகளுக்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்றிட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பிரித்தானியக் கிளை செயற்படும் என அதன் தலைவர் சட்டத்தரணி இரத்தினசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சுவிஸ்சர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கிளைகள் திறக்கப்படவுள்ளதாக அதன் ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-5)

# ரென்சன்... ரென்சன்... ஐயா! எப்போ பென்சன்!

வடக்கு மாகாணத்தின் அரச நிர்வாகத்தில், உயர்மட்ட அதிகாரிகள் முதல் கீழ் மட்டப் பணியாளர்கள் வரை வெறுப்படைந்துள்ள நிலையைக் காணமுடிகின்றது.

ஏதோ ஒரு வகையில் அவர்கள் விரக்திக்கும் மன அழுத்தத்திற்கும் ஆட்பட்டுள்ளனர்.

யுத்தம் முடிந்த கையோடு இதோ வடக்கை இந்திரலோகமாக்குகின்றோம் என்ற எடுப்பில் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

யுத்தத்தில் வெற்றிபெற்றவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபுலத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்களுக்கு அழுத்தத்தைக் கொடுக்க அவர்கள் என்ன செய்வது? ஏது செய்வது? என்று தெரியாமல் திகைக்கின்றனர்.

இருந்ததை எல்லாம் குண்டுவீசி அழித்துக் கொட்டிவிட்டு ஆறுமாதத்தில் அதைச் செப்பனிடுவதாகக் கூறிக்கொண்டு அரச பணியாளர்களை வதைப்பது யாழ்ப்பாணக் கோட்டை கட்டிய பழைய வரலாற்றையே ஞாபகப்படுத்துகின்றது.

வடபுலத்தில் உயர் அதிகாரிகள் முதல் சாதாரண பணியாளர்கள் வரை எவருமே சிரித்த முகத்துடன் அலுவலகத்திற்கு செல்வதைக் காணமுடியவில்லை.

வாடகை வீட்டுப்பிரச்சினை, பிள்ளைகளை பாடசாலைக்கு கூட்டிச் செல்லுதல், பொருளாதார நெருக்கடி, சுடவேவாழ்வியலுக்கானபோராட்டம் என்ற நிகழ்ச்சிகளோடு பட்டலையும் வட பகுதி அரச அலுவலர்கள், இப்போது ஏச்சு, பேச்சு வேண்டவும்; ராகம், தாளம், பல்லவி போடவும் படாப்பாடு பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

ஆளுநர் அலுவலகத்தின் அறிவுறுத்தல், வடக்கு மாகாண அமைச்சுக்களின் கடுப்பு, திணைக்களத் தலைவர்கள் கொதிப்பு ஏனைய, அதிகாரிகள் பதைப்பு, பணியாளர்கள் வதைப்பு என்பதாக நிகழ்ச்சி ஓடுகின்றது.

யதார்த்தத்தை துணிந்து கூறும் அதிகாரிகளின் பஞ்சம் வடபுலத்து அரச பணியாளர்களின் மனத்தை வாட்டவும் ஆயுளைக் குறைக்கவும் வழிகோலிவிடுகிறது.

செய் அல்லது செத்துமடி என்ற 'சேனைக்கட்ளை' போல அரச நிர்வாகத்தை நடத்த முற்படுவது அவ்வளவு அழகல்ல.

ஒவ்வொரு பணியாளர்களும் தத்தம் கடமைகளை நேர்மையாகவும், ஒழுங்காகவும் பற்றுறுதியோடும் செய்யவேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை.

அதேநேரம் செய்கின்ற பணியில் பற்றும் பாசமும் கொள்வதற்கான களநிலையும் இருக்கவேண்டும் என்பதை எவரும் மறுக்கக்கூடாது.

தென் பகுதி அரச அலுவலர்கள் அரச வாகனத்தில் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்துச் செல்லவும் வீட்டுத் தேவைக்காக அதனைப் பயன்படுத்தவும் வசதிகள் இருக்கும்போது,

தங்கள் அலுவலகப் பணியில் அதிகநேரம் சிரிப்பிலும், கதைப்பிலும் காலத்தை வீணாக்கும் போது,

வடபுலத்து அரச பணியாளர்களை வேலை செய்யாதவர்கள் போல அவர்களை நடத்த முற்படுவது 'தமிழர்கள் விசுவாசமான அடிமைகள்' என்ற பழைய வார்த்தையை உறுதிப்படுத்துவதாகவே இருக்கும்.

எதவாயினும் உயர் பதவிகளில் இருக்கும் தமிழ் அரச அதிகாரிகள் எடுத்ததற்கெல்லாம் ஆம் சொல்லாமல் யதார்த்தம்– மற்றும் நடைமுறைச் சிக்கல் பற்றியும் எடுத்துக்கூறவேண்டும்.

இதைச் செய்யத் தவறின் வடபுலத்து அரச உத்தியோகத்தர்கள் ரென்சன் கூடி ஐயா! பென்சன் தாருங்கள் என்று கேட்பர்.

அதற்குப்பின் இந்த இடங்களில் நியமிக்கப்படுபவர்களுடன் எங்கள் மக்கள் கதைப்பதற்கு மொழி பெயர்ப்பாளரும் தேவைப்படும்.

ஆகவே வாழ்க்கை வாழ்வதற்கே அதனை அரச சேவையில் இணைந்த தமிழர்கள் என்பதற்காக வதை செய்துவிடாதீர்கள்.

# சுவாமி விவேகானந்தரின் எழுமின்! விழிமின்!



நாம் வாழும் காலம் குறுகியது. ஆனால் நம்முள் உள்ள ஆன்மா அழிவற்றது. நிலைபேறுடையது. ஒன்று மட்டும் நிச்சயம். அதுதான் மரணம். எனவே நாம் பெரியதொரு குறிக்கோளை, உன்னதமான கொள்கையை வாழ்க்கையின் நோக்கமாக ஏற்போம். அதை அடைய வாழ்நாள் முழுதும் பாடுபடுவோம். உழைப்போம். இதுவே நம்முடைய முற்று முடிந்த தீர்மானமாக இருக்கட்டும். சாத்திரங்கள் கூறுவது போல 'தன் மக்களைக் காப்பதற்காக, உய்விற்பதற்காக அடிக்கடி மனித உருக்கொண்டு இவ்வுலகுக்கு வரும் இறைவன் நம்மைக் காப்பானாக! பெரியோனான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா நம்மைக் காத்தருள்வானாக! நம் குறிக்கோளை முடித்துத் தருவானாக' என்று வேண்டுவோம்.

இளந்தீரர்களே! எழுமின்! விழிமின்! காலம் அனுகூலமாக இருக்கிறது. தைரியம் கொள்ளுங்கள்! அச்சம் வேண்டாம். நம் சாத்திரங்கள் மட்டுமே இறைவனுக்கு 'அபீ! அபீ!' என்ற அடைமொழியினை அளித்துள்ளது. நாமும் அபீக்களாக (அச்சமற்றவர்களாக) அஞ்சாமை கொண்டவர்களாக மாறுவோம்; மாறவேண்டும். அப்போதுதான் மகத்தான இந்த வேலையை செய்ய இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் விரைவில் அரசியல் பிரவேசம்?



நடிகர் விஜய் தன் ரசிகர் மன்ற நிர்வாகிகளுடன் சென்னையில் நேற்றுமுன்தினம் திடீரென இரகசிய ஆலோசனையில் ஈடுபட்டார். தன்னுடைய ரசிகர் மன்றங்களை ஒருங்கிணைத்து அரசியல் இயக்கமாக மாற்றுவது குறித்தும், எதிர்வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் தங்களது நிலைப்பாடு குறித்தும், தலைமை அலுவலகம் அமைப்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

கடந்த வரும் அரசியல் பிரவேசம் குறித்து தன் கருத்தை வெளியிட்ட நடிகர் விஜய், காங்கிரஸ் கட்சியில் சேருவார் என எதிர்பார்க்கப்பட்டது. இதுதொடர்பாக ராகுல் காந்தியையும் அவர் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில், காங்கிரஸில் இணைய ராகுல் கோரிக்கை வைத்ததாகவும், அப்படி இணைந்தால் இளைஞர் காங்கிரஸில் முக்கிய பதவி தரவேண்டும் என விஜய் கேட்டதாகவும் செய்திகள் வெளியாகின.

"இப்போது அரசியல் இயக்கம் தொடங்குவது குறித்து யோசிக்கவில்லை. பிற்காலத்தில் முடிவெடுக்கப்படும்'' என பத்திரிகையாளர்களைச் சந்தித்து அப்போது விஜய் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து படப்பிடிப்புகளுக்கு செல்லும் இடங்களில் எல்லாம் மாவட்ட நிர்வாகிகளைச் சந்தித்து அரசியல் பிரவேசம் குறித்து கருத்துக்களைக் கேட்டு வந்தார். மதுரை, புதுக்கோட்டை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் நடைபெற்ற மாவட்ட நிர்வாகிகளின் கூட்டத்தில் விரைவில் அரசியல் பிரவேசம் இருக்கும் எனப் பேசினார்.

கடந்த சில வாரங்களுக்கு முன் உடுமலைப் பேட்டையில் நடைபெற்ற இரசிகர் மன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிலும் அரசியல் குறித்து கூறினார்.

அப்போது பேசிய ரசிகர் மன்ற நிர்வாகிகள் பலர், தேர்தலை அரசியல் இயக்கமாக சந்திக்கவேண்டும். அரசியலுக்கு வர இது தகுந்தநேரம், பொங்கல் பண்டிகைக்குள் முடிவை அறிவிக்கவேண்டும் என கோரிக்கை வைத்ததாகத் தெரிகிறது.

இந்தச் சூழ்நிலையில் சென்னை வட பழனியில் உள்ள ஜே.எஸ். திருமண மண்டபத்தில் திங்கட்கிழமை மாலை இந்த இரகசிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

தமிழகம் முழுவதிலும் இருந்து வந்திருந்த மாவட்ட, நகர, ஒன்றிய ரசிகர் மன்ற நிர்வாகிகள் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் தன் அரசியல் நிலைப்பாடு குறித்து விஜய் மனம் திறந்துபேசியதாகவும், நிர்வாகிகளின் கருத்துக்களைக் கேட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. விஜயின் தந்தையும், திரைப்பட இயக்குநருமான எஸ். ஏ. சந்திரசேகரன் உள்ளிட்ட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-2)

# இலங்கை மீனவர்கள் 11 பேர் கைது


(சென்னை)

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த இலங்கை மீனவர்கள் 11பேர் கைது செய்யப்பட்டனர்.

இலங்கை மீனவர்கள் மகாவலிபுரத்திற்கு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களை தமிழகக் கடலோரக் காவல் படை கைது செய்தது.

கைது செய்யப்பட்ட 11 பேரும் சென்னை காசிமேடு காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கை மீனவர்களின் 2 படகுகளும் 5ஆயிரத்து 500 கிலோ மீன்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ஸ்ரீ)



சபரிமலையில் மண்டலபூசைக்காக திறக்கப்பட்ட நாள் முதல் அதிக கூட்டம் காணப்படுகிறது. 18ஆம் படியேற வரிசையில் காத்திருக்கும் பக்தர்கள் கூட்டத்தை படத்தில் காணலாம்.

## பாரதச் செய்திகள்

# சீரற்ற இதயத்துடிப்பை கண்டுபிடிக்கும் புதிய கருவி

## சென்னை அப்பலோ மருத்துவமனையில் அறிமுகம்

(சென்னை)

சீரற்ற இதயத்துடிப்பை கண்டுபிடிக்கும் நவீன கருவி சென்னை அப்பலோ மருத்துவமனையில் அறிமுகம்செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து அப்பலோ குழுமத்தின் செயல் தலைவர் ஆர்.பாசில், இதய சிகிச்சைப் பிரிவின் இயக்குநர் டாக்டர் ஐ.சத்யமூர்த்தி, இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் கார்த்திகேசன், புதிய கருவி குறித்து டாக்டர்களுக்கு பயிற்சி அளிக்கும் பேராசிரியர் யூஜின் டொனார் ஆகியோர் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

இதயத்திலுள்ள மின் உந்துவிசைகள் சரியாக செயற்படாததால், இதயம் மிக வேகமாக அல்லது மிக மெதுவாக முறைப்பற்ற வகையில் துடிக்கிறது.

இந்தியாவில் சுமார் 80 இலட்சம் பேர் இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளனர். வழக்கத்துக்கு மாறான இதயத்துடிப்பைக் கொண்டுள்ள நோயாளிகளுக்கு அதற்கு எதிரான மருந்துகளைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இவர்களில் 50 சதவீதத்தினருக்கு மருந்துகள் பயனளிப்பதில்லை. தாங்கமுடியாத பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன. இந்தக் குழப்பங்களை நீக்குவதற்காக புதிய பரிசோதனை கருவி அப்பலோ மருத்துவமனையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கருவியின் மூலம் இதயத்தின் வரைபடத்தையும், அதன் மின் செயல்பாட்டையும் 3டி முறையில் டாக்டர்கள் கண்காணிக்க முடியும்.

இதனால் இதயத்தின் எந்தப் பகுதியில் பதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை துல்லியமாக அறிந்து சிகிச்சை வழங்கமுடியும். பாதிப்பு ஏற்பட்டுள்ள இடத்தில் ரேடியோ ஃபிரிக்குவன்சி ஆற்றலை செலுத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினையை பெரும்பாலும் குணப்படுத்தி விடலாம் என்று தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

# ஐ.நா.வில் நிரந்தர அந்தஸ்து ;

# இந்தியாவுக்கு ஆதரவு பெருகுகிறது

(புதுடில்லி)

ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து கிடைக்க ஆதரவு பெருகுகிறது. சமீபத்தில் இந்தியா வந்திருந்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர அந்தஸ்தைப் பெற அமெரிக்கா முழு ஆதரவளிப்பதாக தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து இந்தியாவுக்கு பல்வேறு நாடுகளும் ஆதரவுக் கரத்தை நீட்ட முன்வந்துள்ளன.

இந்த விடயத்தை இந்தியாவும் தீவிரமாக எடுத்துக் கொண்டு ஐ.நா.வில் நிரந்தர அந்தஸ்தைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

சமீபத்தில் இந்தியாவுக்கு வருகை தந்த ஜப்பான் வெளியுறவு துணை அமைச்சர், ஐ.நா.பாதுகாப்பு சபையில் சீர்திருத்தம் கொண்டுவருவது குறித்து ஆலோசனை நடத்தினார்.

இதனையடுத்து இந்தியாவுக்கு வந்த ஐ.நா.வுக்கான பிரான்சின் வெளியுறவு அமைச்சகப் பிரதிநிதி சைல்வி பெர்மன் இந்திய வெளியுறவு செயலர் நிருபமாராவை சந்தித்துப் பேசினார்.

ஐ.நா.பாதுகாப்பு சபையில் சீர்திருத்தம் கொண்டுவருவது குறித்து இருவரும் ஆலோசித்தனர். அப்போது ஐ.நா.பாதுகாப்பு சபையில் நிரந்தர அந்தஸ்தைப் பெற இந்தியாவுக்கு ஆதரவையும் சைல்வி பெர்மன் தெரிவித்தார்.

இந்நிலையில் ரஷ்யா, ஜேர் மனி ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் இந்தியாவுக்கு விரைவில் வருகை தரவுள்ளனர். அவர்களும் வெளியுறவு செயலர் நிருபமாராவை சந்தித்து ஐ.நா.பாதுகாப்பு சபையில் சீர்திருத்தம் கொண்டு வருவது குறித்து ஆலோசிக்கவுள்ளனர் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ)



புதுடில்லி வந்துள்ள ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## எல்லைப் பிரச்சினை குறித்து

# இந்தியா - சீனா பேச்சுவார்த்தை

(பீஜிங்)

எல்லை பிரச்சினை குறித்து இந்திய - சீனப் பிரதிநிதிகள், பீஜிங்கில் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்திய - சீன எல்லையில் லடாக் பகுதியையொட்டிய அக்சாய் சின் மற்றும் அருணாசல பிரதேசத்தில் திபெத்தையொட்டிய பகுதிகளில் உள்ள எல்லையை இருநாடுகளும் உரிமை கோருகின்றன. சீனாவுக்கும், இந்தியாவுக்கும் இடையே 4 ஆயிரம் கி.மீ தூரத்துக்கு எல்லை பகுதிகள் உள்ளன.

இருநாட்டு எல்லை பகுதியை வரையறை செய்வது குறித்து இதுவரை 13 முறை பேச்சுவார்த்தை நடத்தியும் உரிய தீர்வு காணப்படவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் சீன தலைநகர் பீஜிங்கில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், சீனப் பாதுகாப்பு ஆலோசகர் தாய் பிங்குவா ஆகியோர் தலைமையிலான பிரதிநிதிகள் இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும்

## தெல்லிப்பழைப் பிரதேச செயலர் ஆலோசனை



(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து 20 வருடங்களின் பின்னர் மீளக் குடியேறியுள்ள மக்கள் கண்ணிவெடிகள் குறித்து அவதானத்துடன் செயற்படவேண்டும் என தெல்லிப்பழைப் பிரதேச செயலர் எம்.முரளிதரன் ஆலோசனை வழங்கினார்.

வலிகாமம் வடக்கில் மீள் குடியமர்ந்த மக்களுக்கான மிதிவெடி அபாயம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு பன்னாலை சேர். கனகசபை அ.த.க. பாடசாலையில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள் குடியமர்ந்த மக்கள் இலகுவான முறையில் போக்குவரத்து மேற்கொள்வதற்கென வீதிகள் நிச்சயம் புனரமைத்துத் தரப்படும். குறுகிய காலத்தில் இப்பிரதேசத்திலுள்ள அனைத்து வீதிகளும் புனரமைப்புச் செய்வது இயலாத ஒன்று. எனவே முக்கியமான சில வீதிகள் புனரமைப்புப் பணிகள் சில தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யுத்தத்தின் போது இந்தப்பகுதியில் மிதிவெடிகள் அதிகமாக புதைத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றினை அகற்றும்வரை குறிப்பிட்ட எல்லைகளை மட்டுமே மக்கள் தமது போக்குவரத்துக்கு உபயோகிக்கவேண்டும்.

20 வருடமாக இடம்பெயர்ந்து இருந்து மீண்டும் மீள் குடியேறியுள்ள நீங்கள் உயிரையோ, உடல் உறுப்புக்களையோ இழந்துவிடக் கூடாது. இதற்கெனத்தான் உங்களிற்கு இத்தகைய மிதிவெடி அபாயக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மக்களின் இலகுவான போக்கவரத்துக்கு என மண் அனைகளில் சிறுபகுதி மட்டும் தற்போது அகற்றப்படும். ஏனையவை காலப்போக்கில் முற்றாக நீக்கி போக்குவரத்து துரிதப்படுத்தப்படும்.

மக்களிடம் நாம் வேண்டுவது நீண்ட காலத்தின் பின் உங்கள் சொந்த இடங்களில் குடியேறும் நீங்கள் உங்களது காணிகளில் எல்லைகளை சரிவர அளந்து பெற்றுக்கொள்ளுங்கள். வீதிகளை புனரமைப்புச் செய்யும்போது அந்தந்தக் காணி உரிமையாளர்கள் தமது காணி எல்லைகளை எல்லைப்படுத்தி பிரச்சினைகள் ஏற்படாத வண்ணம் எச்சரிக்கையாக நடந்துகொள்ளுங்கள்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். மிதிவெடிகள் முற்றாக நீக்கப்படாத பகுதிகளிலேயே நீங்கள் மீள் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளீர்கள் எனவே உங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளை அவதானியுங்கள். தேவையற்ற பொருட்களை கையாளுவதிலிருந்து அவர்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்றார். (ச-6)

# பிரபல ஆங்கில பத்திரிகையாளர் சிவநாயகம் கொழும்பில் காலமானார்

(கொழும்பு)



பிரபல ஆங்கில பத்திரிகையாளர் சுப்பிரமணியம் சிவநாயகம் (வயது 80) நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

1981ஆம் ஆண்டு வரை கொழும்பில் வாழ்ந்த காலங்களில் பிரபல ஆங்கில பத்திரிகைகளான டெய்லி நியூஸ், டெய்லி மிரர் ஆகியவற்றுடன் ,சிறிலங்கா சுற்றுலா நிறுவனத்திலும் கடமையாற்றியவர்.அதன் பின்னர், யாழ்ப்பாணத்தில் கல்விமான்களினால் 1982ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சற்றடே றீவியில் (Saturday Review) ஆசிரியராக கடமையாற்றினார். ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசாங்கம் சற்றடே றீவியுவை தடைசெய்து சிவநாயகம் அவர்களுக்கு பல தொல்லைகளைக் கொடுத்த காரணத்தால் சிவநாயகம் அவர்கள் இந்தியா சென்று, அங்கு தமிழர் தகவல் மையத்தில் (Tamil Information Centre -TIC)சில காலம் கடமையாற்றினார்.

இவ்வேளையில் இவரது சில நண்பர்களின் அழைப்பினாலும் இவரது சில குடும்ப அங்கத்தவர்களுக்கு அருகாமையில் வாழ்வதற்காக லண்டன் பிரித்தானியா சென்று அங்கு கோற் பிறிங் ஆங்கில மாதச் சஞ்சிகையை தொடர்ந்து நடத்தி வந்தார்.

யாழ்ப்பாணத்தில் கொக்குவிலை பிறப்பிடமாக கொண்ட சிவநாயகம் கொக்குவில் இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

## சட்டத்தரணிகள் போராட்டம்

கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதியும் ஜ.தே.கூ. தலைவருமான சரத் பொன்சேகாவை விடுதலைசெய்யுமாறு வலியுறுத்தி ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகளின் ஒன்றியம் நேற்று எதிர்ப்புப் பேரணி ஒன்றைநடத்தியது. இந்தப் பேரணி கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகப்பகுதியில் இடம்பெற்றது. இந்தப் பேரணியில் ஜதேகூ சார்பில் அனோமா பொன்சேகா, அதன் நாடாளுமன்றக் குழுத்தலைவர் அனுர குமார திஸாநாயக்க, லஷ்மன் நிபுணாராட்சி மற்றும் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-5)

# முதல் வெற்றி காம்பீர் மகிழ்ச்சி

(கவுகாத்தி)



அணித்தலைவராகப் பொறுப்பேற்ற முதல் போட்டியிலேயே வெற்றி கிடைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என இந்திய வீரர் காம்பீர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இத் தொடருக்கான இந்திய அணியில் தோனி, சேவாக், டெண்டுல்கர், சகீர்கான், ஹர்பஜன் சிங் ஆகிய முன்னணி வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் அணியின் தலைவராக காம்பீர் செயல்பட்டு வருகிறார். கவுகாத்தியில் நடந்த முதல் போட்டியில் இந்திய அணி 40 ஓட் டங்கள் வித்தியாசத்தில் சிறப்பான வெற்றிபெற்றது.

இவ் வெற்றிகுறித்து காம்பீர் கூறியதாவது,

ஒரு அணித்தலைவராக நான் பொறுப்பேற்ற முதல் போட்டி வெற்றியாக அமைந்திருக்கிறது. இது மகிழ்ச்சிதரும் விடயம். அணியில் இடம் பெற்ற அனைத்து வீரர்களும் நல்ல ஒத்துழைப்பு அளித்தனர். பயிற்சியாளர் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் நல்ல உற்சாகம் கொடுத்தனர். இதனால்தான் அணித்தலைவராக எனது பணியை சிறப்பாகச் செய்ய முடிந்தது. இனி வரும் போட்டிகளிலும் சிறப்பாகச் செயல்பட்டு ஒருநாள் தொடரைக் கைப்பற்றுவோம். இவ்வாறு காம்பீர் தெரிவித்தார்.

### பிளட்சர் உதவி

இந்தியத் தொடரில் சொதப்பிவரும் நியூசிலாந்து அணிக்கு ஆலோசகராகச் செயல்படவுள்ளார். இங்கிலாந்து அணியின் முன்னாள் பயிற்சியாளர் பிளட்சர், இவர் பயிற்சியாளர் மார்க் கிரேட் பாட்சுடன் இணைந்து நியூசிலாந்து அணி வீரர்களுக்கு ஆலோசனை அளிக்கவுள்ளார்.

# முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு உட்பட்ட தரம்-5 மாணவர்களுக்கு கொடுப்பனவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்விவலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம்-5 புலமைப்பரிசில் கொடுப்பனவுக்கு உரித்துடைய மாணவர்களுக்கு 2008, 2009 மற்றும் 2010 வருடங்களுக்கு மட்டும் உதவிப் பணக் கொடுப்பனவு வழங்குவதற்கு மேலதிகமாக சகாயம் அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் கல்விப்பணிப்பாளர் மேலும் கூறியதாவது,

முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளில் முன்னர் புலமைப்பரிசில் பரீட்சைக் கொடுப்பனவு பெற்றவர்களும் 2008, 2009 மற்றும் 2010ல் புலமைப்பரிசில் கொடுப்பனவு பெறத் தகுதி பெற்றவர்களும் உடனடியாக பாடசாலை அதிபருடன் தொடர்புகொள்ள வேண்டும்.

வேறு வலயப் பாடசாலைகளில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள் இதுவரை கொடுப்பனவை பெறாவிட்டால் தமது விபரங்களை தற்போதைய பாடசாலை அதிபர் மூலம் உறுதிப்படுத்திய கடிதம் மூலம் பழைய பாடசாலைகளில் பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

முன்னர் கொடுப்பனவு பெற்றவர்கள் தம் இடப்பெயர்வின் முன் கொடுப்பனவு பெற்ற வங்கி விபரத்தையும் கணக்கு இலக்கத்தையும் புதியவர்கள் கொடுப்பனவுக்குரிய புதிய கணக்குகளைத் திறந்து கணக்கு இலக்கத்தையும் தவறாது கொடுத்து கொடுப்பனவுகளை விரைவுபடுத்தவும்.

மார்கழி 06 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர்கள் தமக்குக் கிடைக்கப்பெற்ற விபரங்களை செவ்வை பார்த்து தமது சிபாரிசிடன் முல்லைத்தீவு அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும்,

வலயத்திற்கான ஒதுக்கீட்டில் முதல் கிடைக்கும் விபரங்களுக்கு முதலில் கொடுப்பனவுகள் என்ற அடிப்படையில் இவ்விடயம் கையாளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# ஜனாதிபதியைக் கைது...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று அதிகாலை பிரித்தானியாவின் விமானநிலையத்தை சென்றடைந்தார். இவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றுவதற்காகவே அவர் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்த இறுதிக் கட்டப் போரின் போது தமிழ் மக்கள் மீது பல விதமாக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் திணிக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்காக தமிழ் மக்களின் உயிர்களைக்காவு கொண்ட ஒரு ஜனாதிபதி பிரிட்டனுக்குள் நுழையவிடக்கூடாது என்ற வெளிப்பாட்டுடன் பிரித்தானிய வாழ் தமிழ் மக்கள் ஒன்றுகூடி ஜனாதிபதிக்கெதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் பின்னணியில் பிரிட்டன் நாட்டுச் சட்டத்திற்கு அமைய ஜனாதிபதியை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தமது ஆர்ப்பாட்டங்கள் மூலமாவது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகளை உலகறிய செய்து சர்வதேசரீதியில் அவமரியாதையை பரிசாக வழங்கி வைப்போமென பிரிட்டன் வாழ் தமிழர் பேரவை அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,தமிழர்களைப் பொறுத்தவரையில் தமிழீழம் என்பது தன்மானக் கொள்கை. இவற்றை வற்புறுத்தி இப் போராட்ட ரீதியான முன்னெடுப்புக்களை விடுதலைப்புலிகள் மேற்கொண்டனர்.

இலங்கை அரசு சர்வதேச நாடகளிடம் அவர்களைப் பயங்கரவாதிகளாக காட்டிக்கொண்டு சிறுபான்மையினரான தமிழர்களை ஒடுககுவதற்கு முயற்சிக்கின்றது.

இந்த நடவடிக்கைகளை மழுங்கடிக்கும் முகமாக நாம் எமது எதிர்பினைகளை வெளிக்காட்டி சிறந்த பரிசினை வழங்கவோம். ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு பொலிஸார் தமது அனுமதியினை வழங்கியுள்ளனர். நாளையதினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றும்போது பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம் இதற்கான பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு லண்டன் நகரமெங்கும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளது. இவ்வார்பாட்டங்களுக்கு பிரித்தானியாவில் வாழ்கின்ற முஸ்லிம், சிங்கள மக்களும் [illegible] என்று அவர் தெரிவித்தார். (எ-5,7)

# பிரிட்டன் செல்ல புதிய விதிமுறை நவம்பர் 29திலிருந்து நடைமுறைக்கு

பிரிட்டனுக்குப் பிரவேசிக்கும் ஐரோப்பியர் அல்லாதவர்கள் ஆங்கில மொழிப் பரீட்சை ஒன்றுக்கு தோற்றவேண்டும் என்று புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை நவம்பர் 29 ஆம் திகதிமுதல் அமுலுக்கு வந்துள்ளது. பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு அல்லது பிரிட்டனில் குடியேறியிருப்பவர்களுக்கு பங்காளிகளாக அல்லது வாழ்க்கைத்துணையாகவர விரும்பி பிரிட்டனுக்கு சமுகமளிக்கும் வகையில் விசா கோரி விண்ணப்பிப்பவர்கள் இந்த ஆங்கிலப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

தற்காலிக விசாவுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு இது தேவையில்லை. புள்ளி அடிப்டையில் விசா பெறும் மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் இது தேவையில்லை.

மேற்படி விசாவுக்கு விண்ணப்பிப்பவர்கள் அடிப்படையில் தங்களுக்கு ஆங்கிலம் பேசவும் புரிந்துகொள்ளவும் முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும். பிரிட்டிஷ் எல்லை முகவராண்மையின் அங்கீகாரம் பெற்ற வினாத்தாள் ஒன்றுக்கே இவர்கள் முகங்கொடுக்க வேண்டும்.

விசாவுக்கு விண்ணப்பிப்பதற்கு முன் இந்தப்பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்த சான்றிதழுடனேயே விசா விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவேண்டும் என்றும் கேட்டுள்ளது.

பிரிட்டனின் பட்டப்படிப்புக் கற்கைநெறிச் சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் மூலமும் இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதை தவிர்க்கலாம். அப்படியாயின் கற்கை நெறியின் அசல் சான்றிதழை சமர்ப்பிக்கவேண்டும். (ச-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதுடில்லிக்கு வருகை தருமாறு அமைச்சர் டக்ளஸுக்கு அழைப்பு

(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை புதுடில்லிக்கு வருமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அழைப்பு விடுத்ததாக அக் கட்சி வெளியிட்ட ஊடக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த எஸ்.எம்.கிருஷ்ணா நாடு திரும்பும் தருணத்தில் அவரை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிகழ்ந்த இச் சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, தாம் அவசரமாக நாடுதிரும்ப வேண்டியிருப்பதால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன்படி தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சந்திக்க முடியாமல் போயுள்ள விடயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்திருந்தார். இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். (எ-1)

# பாகிஸ்தானை முன்னுதாரணமாகக் கொண்டு இலங்கை அரசாங்கம் செயற்படவேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானை முன்னுதாரணமாகக் கொண்டு இலங்கை செயற்பட வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாகிஸ்தான் அரசாங்கம் அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தற்பொழுது தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல அரசியல் கைதிகளையும் அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். (ச-5)

Diploma Courses... புதிய பிரிவுகள் ஆரம்பம்
*MS Office *Accounting *Graphics 3D *Printing & Typing, Kids Programs
*Web Development *Multimedia *AutoCAD *VB.net, *LINUX, *ICT
International Courses...
Hardware / Software Engineering - USA, CCNA, Java(Oracle Campus), Linux, BCS, CIMA - UK, Hacking, Toefl / IELTS
Government Schol.
90% Mega Schol.
Rs.800 Upwards
MCS
Supported By UNDP/JRRP
Free ICDL, BCS, Hardware, English
SMS your name & course to 0772 395 895 & get Schol.
324,Palaly Road,Parameswara Junction
Degree Course BIT University of Colombo
Closing Date 03.12.2010
(C-1712)



# ஐ.நாவின் நிலைப்...

ஆவணமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.ஐ.நாவின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு தொடர்பிலும் தகவல்களை வெளியிடுமாறு கோரப்பட்டுள்ளது.

இன ஒடுக்குமுறை யுத்த குற்றச் செயல்கள் திட்டமிட்ட மனித உரிமை ஒடுக்குமுறை போன்ற நடவடிக்கைகள் குறித்து உறுப்பு நாடுகளின் நிலைப்பாடு குறித்து அறிந்து கொள்வதற்கும் அமெரிக்கா ஆர்வம் காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பக்கச் சார்பற்றவிசாரணைகள் நடத்தப்பட வேண்டும்என அமெரிக்கா வலியுறுத்தி வந்ததாக விக்கிலீக்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-5)

# கட்டிடம் இடிந்து...

பஸ்தரே உயிரிழந்தவராவார்.கட்டிட இடிபாடுகளுள்ளிருந்து மீட்கப்பட்ட இவரது சடலம் மரண விசாரணையின் பொருட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-7,29)

# தமிழ்த் தேசியக்...

வாதத்தை இல்லாதொழிப்பதற்கு பல்வேறு தியாகங்களை மேற்கொண்ட படை வீரர்களுக்கு நன்றி பாராட்ட வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

இதன் காரணமாகவே பாதுகாப்புச் செலவுகளுக்காக அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது.கடன்களை செலுத்தக் கூடிய வல்லமை காணப்படுகிறது. அதன் காரணமாகவே நாட்டுக்கு கடன்கள் வழங்கப்படுகிறது என்றார். (ச-5)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
Learn French the French Way
சர்வதேச மொழியான French மொழி வகுப்புகள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.
மாணவர்கள் ,சிறுவர்கள் ,வெளிநாட்டிற்கு போகிறவர்கள் எவரும் கற்றுக் கொள்ளலாம்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo.com
மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம்.
(3148)

STUDY IN UK
யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில் உங்கள் கனவுகளை நனவாக்கிட உங்கள் நம்பிக்கையான நண்பன்.
IELTS அவசியமில்லை
JANUARY ADMISSONக்கான இறுதிவாய்ப்பு
(3152)
❀ கல்லூரிக் கட்டணம் அதிகூடிய தொகை 2000 பவுண்ஸ் மட்டுமே.
❀ மிகக்குறைந்த செலவில் Sponsor வசதிகள்.
❀ பிரபலமான சட்டத்தரணிகளின் வழிகாட்டல் உதவியுடன்
❀ குடும்பமாக கல்வி பயிலக்கூடிய வாய்ப்புகள்
❀ லண்டனில் உயர்தரப் பல்கலைக் கழகங்கள் /கல்லூரிகளில் அனுமதி
❀ Visa வுக்கான 100% உத்தரவாதம்
❀ மிகக்குறுகிய காலத்தில் பயணம் செய்யலாம்.
❀ Interview இன்றி 3 நாட்களில் கல்லூரி அனுமதிகள்.
தொடர்பு: 0770871616
அலுவலக விலாசம்
245,பலாலி வீதி,கந்தர்மடம். (Baby Photo அருகாமை)
அலுவலக நேரங்கள்
திங்கள் - சனி வரை காலை 9.00-பி.ப.3.30
எங்கள் மூலமாய் UK சென்றுள்ள குடும்பங்களின் விபரங்களை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.

BRITISH COUNCIL
British College of English
IELTS

We Provide
* A Placement test which determines to which level to which level of English you belong.
* Updated course modules.
* Materials approved by British Council Which are quite new including Cambridge 7
* 20 Practice test .
* Frees IELTS pack & Mock Exams .
IELTS Registration Centre for British Council
நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்கமுடியும்.
கடந்த August 2010 இல் நடைபெற்ற IELTS பரீட்சைகளில் எமது கல்லூரியில் படித்துப் பரீட்சை எழுதிய மாணவர்களில் ஒருவர் Band - 8 இருவர் 7.5 நால்வர் 6.5 எடுத்து சாதனைபுரிந்துள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
Course Schedule: Sat & Sun
Duration: 10 Weeks
Time: 8.30 to 11.30, 2.00 to 5.00 p.m
Commencement: Dec 4 th
February மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்பு
வகுப்புக்கள் 04.12.2010 இல் ஆரம்பமாகும்.
BRITISH COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P:0213216027 - 0778803887
(C-1675)


கோலாகல திறப்பு விழா
ரதி ஜுவல்லரி
Rathy Jewellery

01.12.2010 புதன்கிழமை இன்று காலை 10.00 மணிக்கு கோலாகலமாக திறந்து வைக்கப்படுவதனால் அன்பர்கள் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
537, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
தங்கநகை உலகில் என்றென்றும் புதுமையான டிசைன்களை உங்கள் மனம் போல் தெரிவு செய்திட இன்றே நாடுங்கள்
கிளை : ரதி ஜுவல்லரி, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால். இங்ஙனம்: ம.மதுராந்தன் (சுரேஸ்) -உரிமையாளர்-
(3151)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.